Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

FedEx Express

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 31 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 06 (14.06.2005) செவ்வாய்க்கிழமை

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த சந்திரிகாவுக்கு ரணில் ஆதரவு!



## அரசு கவிழ்வதற்கு ஐ.தே.க. துணைபோகாது


கொழும்பு

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தால் தற்போதைய அரசாங்கம் கவிழ்க்கப்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் ஆதரவு வழங்காது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - ஜனாதிபதி சந்திரிகாவிடம் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவை நேற்றுமாலை சந்தித்துப் பேச்சு நடத்திய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - ஜனாதிபதி சந்திரிகாவிடம் இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

ஜனாதிபதி மாளிகையில் நேற் ] இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமார் 40 நிமிட நேரம் நீடித்ததாகவும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)



## பேரினவாத சக்திகளைக் கண்டித்து பல்கலை மாணவர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம்

தென்னிலங்கை மதவாத சக்திகள் தமது பேரினவாதப் போக்கை கைவிடவேண்டும் என வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழக சமூகம் நேற்று முதற்கட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுகூடிய மாணவர்கள் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவியை கட்டியிழுத்தவாறு - பேரினவாதப் பிக்குகளின் கோரிக்கைகள் அடங்கிய சவப்பெட்டியை ஏந்தியவாறு ஊர்வலமாக பரமேஸ்வராச் சந்திவரை வந்தனர்.

அங்கு கண்டனக் கூட்டம் யாழ்.பல்கலைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கொழும்பில் நேற்றும் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைப் புனரமைப்பதற்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த ஜனாதிபதி சந்திரிகா எடுத்துவரும் முயற்சிகளைக் கைவிடக் கோரி நேற்றும் பிக்குகள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியால் கொழும்பில் பதற்றமான சூழல் நிலவியது.

பொதுக்கட்டமைப்பு யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியை பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்ப்பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு கலைத்தனர்.

இதனால் பேரணி இடைநடுவில் கைவிடப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காக பொதுக்கட்டமைப்பை கைவிடவேண்டியுள்ளது!



# பொதுக்கட்டமைப்பை கைவிடவேண்டியுள்ளது!

## அனுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

கொழும்பு —

பாடுபட்டு நான் உருவாக்கிய கூட்டணி அரசாங்கத்தை தொடர்ந்து நடத்த - பொதுக்கட்டமைப்பு யோசனையை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

சியம்பலாப்பேயில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது -

சிவப்பு சகோதரர்கள் புதன்கிழமை வரை காலக்கெடு விதித்துள்ளார்கள். இந்த நிலையில் கூட்டணி அரசாங்கத்தைக் காக்கும் வகையிலான தீர்மானம் ஒன்றை ஜனாதிபதி எடுத்தாக வேண்டும். கூட்டணி அரசாங்கத்தை ஏற்படுத்தியது மக்கள். எனவே அரசாங்கத்தைக் கவிழ்க்க யாருக்கும் உரிமையில்லை. ஜனாதிபதிக்கோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கோ, ஜே.வி.பிக்கோ கூட்டணி அரசாங்கத்தைக் கவிழ்க்க உரிமையில்லை.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விடுதலைப் புலிகள் - யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களை நிர்வகித்து வருகிறார்கள். அவர்களிடம் இராணுவ பலமுள்ளது. எந்தநேரத்திலும் யுத்தப்பிரகடனம் செய்யக்கூடிய நிலையில் புலிகள் உள்ளனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே தனது பதவிக்காலத்தின் இறுதிக்கட்டத்தினுள் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஜனாதிபதி முயற்சித்து வரு கிறார்.

பொதுக்கட்டமைப்பு யோசனை கைவிடப்பட்டு நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டால் ஜாதிக ஹெல உறுமயவும் ஏனைய கட்சிகளுமே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி இன்று ஆர்ப்பாட்டம்!

### ஒரு இலட்சம் பேர் திரள்வராம்

கொழும்பு —

பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி கொழும்பில் இன்று நடத்தவிருக்கும் கண்டனப் பேரணிக்கு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தலா 3 ஆயிரம் பேரைத் திரட்டித் தரவேண்டும் என்று கட்சியின் மேலிடம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த உத்தரவு எழுத்துமூலமாக கட்சி மேலிடத்தால் வழங்கப்பட்டிருப்பதாகவும் -

இதன் காரணமாக இந்த ஆர்ப்பாட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு லட்சத்துக்கும் அதிகமாக பொதுமக்கள் கலந்துகொள்ளலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஜே.வி.பி ஆதரவு பல்கலைக்கழக மாணவர் அமைப்பினர் கொழும்பில் நேற்று நடத்திய (12 ஆம் பக்கம் பார்க்க)

## மரணவீட்டில் கிரனேட் வீச்சு; ஒருவர் பலி! 16 பேர் காயம்!!

பொலநறுவ —

பொலநறுவ மாவட்டத்திலுள்ள சொறிவில் கிராமத்தில் மரண வீடொன்றில் இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொதுமகனொருவர் கொல்லப்பட்டார்.


நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 80 வயதான புஞ்சிரால என்ற வயோதிபர் கொல்லப்பட்டதுடன், 16 பேர் காயமடைந்தனர்.

மன்னம்பிட்டி - திம்புலாகல வீதியில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட 23 வயதுடைய சண்முகம் செல்வராஜா என்ற இளைஞரின் மரண வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவரது மரணச் சடங்கு நேற்றுமுன்தினம் மாலை சொறிவில் கிராமத்தில் நடைபெற்றது. வீட்டு முற்றத்தில் அயலவர்களும் உறவினர்களும் உரையாடிக்கொண்டிருந்த சமயம் இந்தக் கைக்குண்டு வீசப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அரலங்கவில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)







# திருவள்ளுவர் நினைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

யாழ்ப்பாணம்—

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 19 ஆவது ஆண்டு திருவள்ளுவர் நினைவு விழாவும், விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் வியாழக்கிழமை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தின் தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்தவிழாவில் வடமராட்சி பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டிகள், பாட்டுப் போட்டிகள், நடனப் போட்டிகள், எழுத்துப் போட்டிகள் போன்றவற்றில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை பெண்களுக்கான 15 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியும், ஆண்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. (12)

# தென்மராட்சியில் உண்ணாவிரதம்

தென்மராட்சி—

அரசின் அடக்கு முறையைக் கண்டித்து நாளை முதல் மூன்று தினம் தென்மராட்சியில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டு வருகிறது.

நாளை காலை 9 மணி முதல் 2 மணி வரை சாவகச்சேரி பஸ் நிலையம் முன்பாக நடைபெற்று மறுநாள் வியாழக்கிழமை கைதடிச் சந்தியிலும் வெள்ளிக்கிழமை கொடிகாமத்திலும் நடைபெறவுள்ளது.

பொதுக்கட்டமைப்புக்கள், அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வணிகர் மன்றங்கள் கலந்து ஒத்துழைப்பு வழங்கும்படி தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

மேலும் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் வரும் சனிக்கிழமை தென்மராட்சி சிற்றூர்தி சங்கத்தின் கண்டன அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்—

மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசிகள் நாளை ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலை அருகில் மு.ப. 8மணி முதல் 10 மணிவரையும், அத்தியடி பிள்ளையார் கோவில் முன்பாக மு.ப. 10.30 முதல் 12.30 வரையும், கல்வியங்காடு வன்னியசிங்கம் படிப்பகத்தில் பி.ப. 2 மணி முதல் 4 மணிவரையும் ஏற்றப்படும்.

எதிர்வரும் 16ஆம் திகதி நல்லூர் இந்து விதி அலுவலக முன்றலில் மு.ப. 8 மணி முதல் 10 மணி வரை ஏற்றப்படும் எனத் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மணற்காட்டில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம்—

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதால் மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மற்றும் மந்திகை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மணற்காட்டில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில்அதே இடத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் சாள்ஸ்அன்ரனி (வயது 18), தோமஸ் குணசீலன் ஜெயசீலி (வயது 24) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களுடன் விபத்தில் காயமடைந்த தோமஸ் குணசீலன் தயாளசீலி (வயது 04), டேவிட் மரியசீலன் செல்லக்குமார் (வயது 23) ஆகியோர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (14)

## விளையாட்டுப் போட்டி

கொக்குவில்—

யாழ். அடைக்கல அன்னை ஆலய முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆலயமுன்றலில் இடம்பெறும்.

விளையாட்டுப் போட்டிக்கு ஆலயப் பங்குத் தந்தை ம.இ. பயஸ் அடிகளார் தலைமை தாங்குவார். (206)


## சிறு விளம்பரம்

### புதிய புத்தகம்

விற்பனையில் சாதனைசெய்த 'இது இந்துமதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்' விலை ரூபா 80/= பரணன், 138, ராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி:- 2222365 (1199)

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)

கரும்புலிகள் நாளையொட்டி
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்தும்
கவிதைப் போட்டி - 2005

நிபந்தனைகள்:
1) தேசவிடுதலையை மையமாகக் கொண்டு படைப்புக்கள் ஆக்கப்படவேண்டும்.
2) 30 வரிகளுக்குக் குறையாமலும் 40 வரிகளுக்கு மேற்படாமலும் படைப்புக்கள் அமைய வேண்டும்.
3) வயது வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

கவிதைகள் யாவும் 25-06-2005 க்கு முன்பாக வந்துசேர வேண்டும். வெற்றியீட்டும் படைப்புக்களுக்கு பெறுமதிவாய்ந்த சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும்

படைப்புக்கள் வந்து சேரவேண்டிய முகவரி:-
கவிதைப்போட்டி - 2005
தலைமைச் செயலகம்;
சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(1200)


## வீடுகளை இழந்தவர்களுக்கு வீடமைப்பு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக யாழ். மாவட்டத்தில் யுத்தத்தால் சேதமடைந்த, வீடுகளையிழந்த 1000 பேருக்கான வீடமைப்பு கொடுப்பனவு நாளை மறுதினம் காலை 11 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்கலந்துகொள்வர்.

## மீனவர்களுக்கு நட்டஈடு

யாழ்ப்பாணம்—

சுனாமி அனர்த்தத்தால் இழுவைப்படகுகளை இழந்த மீனவர்களுக்கு பத்து இலட்சம் ரூபா நட்டஈட்டினை கடற்தொழில் நீரியல் வள அமைச்சு வழங்கவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று கொழும்பிலுள்ள கடற் தொழில் திணைக்கள அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (17)


ராஜா யாழ்ப்பாணம்
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி, பாலகிருஷ்ணா நடித்த
இன்று மட்டும் சூர்யா
நாளை முதல் சரத்குமார், நெப்போலியன், தேவயானி நடித்த
தென்காசிப்பட்டணம்
பு.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க 15ஆம் திகதி வரை
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில் சந்திரமுகி
62 ஆவது நாள்
15ஆம் திகதி தொடக்கம் சரத்குமார் நடிப்பில் ஜீத்தன்
காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

நாகலிங்கம் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்டி பென்டன்ஸ் டே டைரக்டர் ரோலண்ட் எம்ரீக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
நாளை மறுநாள் (தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை சித்தரிக்கும்
காட்சிகள்
புதிய நேரம்:- 10.30,2.30,6.30,9.30

மனோகரா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந்த், கோபிகா, விவேக் நடித்த கனா கண்டேன்
ஜூன் 17 முதல் அதிரடி வெளியீடு! சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்
அந்நியன் – anniyan
இசை:- ஹரீஸ்ஜெயராஜ் இயக்கம்:-சங்கர்
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


# குடாநாட்டு அபிவிருத்தி குறித்து நேற்று யாழ். செயலகத்தில் மாநாடு

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாநகரசபை, நகரசபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றின் செயலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் அந்தந்த உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களிலுள்ள தேவைகள், குறைபாடுகள், சுகாதார வசதிகள், வீதிகள் மற்றும் நிலம் மதிப்பீடுகள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும், பிரதேசங்களிலுள்ள மக்களின் குறைபாடுகளை அறிந்து அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக ஒன்றுபட்டு செயற்படுதல், அவர்களுடைய தேவைகளை ஆராய்ந்து உள்ளூராட்சி மன்றங்கள் அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# தெரிதல் இதழ் வெளிவந்துவிட்டது

கொக்குவில்—

அ.யேசுராசாவின் தெரிதல் ஒன்பதாவது இதழ் வெளிவந்துள்ளது.

வழமையான அம்சங்களுடன் பரதேசியின் ஊடாட்டம், எம். ஏ.நுஃமானின் இலக்கியம், முழு மொத்தமான மனித அனுபவத்தின் வெளிப்பாடு, செம்பியன் செல்வன் எழுதியுள்ள இயக்குநர் மகேந்திரனின் சினிமாவும் நானும், கடலோடியின் உப்பு, விளிம்பு நிலை, மனிதரின் கதை ஆகிய விடயங்களும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. (206)


## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

Muthayamal Educational Institutions
RASIPURAM - 637408, NAMAKKAL-(DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

Call : 0777 767818 / 011-4512591 for prospectus and application forms
SCHOLARS INFORMATION CENTER
2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com

Koyo

டய்டோ
பிறப்பிலே முன்னணியில்...
Cruiser



▸ 100CC ▸ 4 Gear
▸ Kick & Self Start

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO

எங்களிடம் தாராளமாக Honda, Yamaha, Suzuki, Bajaj, Daido, Yamato மற்றும் எல்லா சீன தயாரிப்புகளுக்கு பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவில் கிடைக்கும்



மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு
ஏக முகவர்
செரென்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு - 10.
தொலைபேசி 01-2341580-1, 2438779, பெக்ஸ் 01-2454608 E-mail: zme@slt.lk

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சீன அரசு உதவ விருப்பம்!

கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் உதவிகள் வழங்கத் தயாராக விருப்பதாக சீனா அறிவித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு அழைப்பு விடுக்கப்பட்டால், அதை ஏற்க சீனா தயாராக விருப்பதாக சீனாவின் வெளிவிவகார துணை அமைச்சர் சென்.ஜியோபெங் தெரிவித்தார்.

சீனா சென்றிருந்த தெற்காசிய நாடுகளின் ஊடகவியலாளருடனான சந்திப்பில் சீன வெளிவிவகார துணை அமைச்சர் சென்.ஜியோபெங் பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு அவசியமானது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க உதவுமாறு சீனாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டால், அதை ஏற்க சீனா தயாராகவிருக்கிறது.

இலங்கை அரசுக்கும், சீனாவுக்கும் இடையே நல்லுறவு நீடிக்கிறது. இலங்கையில் அமைதி முயற்சிகளை எப்போதும் சீனா ஆதரித்தே வருகிறது.

வளரும் நாடுகளுடன் குறிப்பாக தெற்காசிய வளரும் நாடுகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதில் சீனா முக்கியத்துவம் அளித்துவருகிறது.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையேயான உறவில் கடந்த சில ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா குறிப்பிடத்தக்க பங்காற்ற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எஸ்.பி.யை இழுக்க சுதந்திரக்கட்சி முயற்சி!

கொழும்பு —



சிறைத்தண்டனையை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸநாயக்காவை மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைக்கும் வகையில் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப் பினர்கள் இரகசிய நடவடிக்கையை மேற் கொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - எஸ்.பி.திஸநாயக்கா தொடர்பாக பின்பற்றி வருவதாகக் கூறப்படும் பலவீனமான செயற்பாடுகள் காரணமாக, எஸ்.பி.திஸநாயக்கா விரக்திக்குட்பட்டுள்ளதால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவரை மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இணைக்கும் சாத்தியங்கள் உள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

எஸ்.பி திஸநாயக்காவை மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைத்துக் கொள்வதன் மூலம், ஜனாதிபதி எதிர்பார்க்கின்ற அரசியலமைப்பு திருத்தத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் 25 பேரின் வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியுமென நம்பப்படுகிறது. (தே)

## நீதிபதிக்கு கொலை அச்சுறுத்தல்!

திருகோணமலை —

திருகோணமலை புத்தர் சிலையை அகற்றக்கோரும் வழக்கை விசாரித்து வரும் திருகோணமலை மாவட்ட நீதிபதி ஆர்.தியாகேந்திரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சரியான தீர்ப்பை வழங்காவிட்டால், கொலை செய்துவிடுவோம் என்று தமிழில் எழுதப்பட்ட கடிதத்தை சிங்களப் பேரினவாதிகள் அனுப்பிவைத்துள்ளனர்.

இன்று வழக்கு விசாரணைக்கு வரும் நிலையில் இந்த மிரட்டலை தமிழ் கண்காணிப்புக் குழு என்ற பெயரில் சிங்களப் பேரினவாதிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

திடீரெனத் திணிக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட வேண்டியது நீதியானது - நியாயமானது என்கின்ற போது, நாம் ஏன் இத்தகைய மிரட்டலைச் செய்யப்போகிறோம். இது பேரினவாதிகளின் வேலைதான் என திருமலை தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்.

# பொலிஸாருக்குப் பயந்தே தேரர் உண்ணாவிரதத்தை கைவிட்டார்!

கொழும்பு —


மகாநாயக்கர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னரே பொதுக் கட்டமைப்பில் தான் கையெழுத் திடுவேன் என்று ஜனாதிபதி சந்திரிகா அளித்த உறுதிமொழியையேற்று உண்ணாவிரதப்போராட்டத்தை ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் கைவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால், பொலிஸாரின் நடவடிக்கைக்கு அச்சப்பட்டே ஓமல்பே சோபித தேரர் உண்ணா விரதப்போராட்டத்தைக் கைவிட்டாதாகக் கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தேரரை அந்த இடத்திலிருந்து அப்புறபடுத்தப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததாகவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான இந்த நடவடிக்கைக் காகக் கண்டி நீதிமன்ற நீதிபதியின் அனுமதியையும் வெள்ளிக்கிழமை இரவே கண்டிப் பொலிஸார் பெற்றிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கலவரம் அடக்கும் குழுவினருடன் தேரர் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு பொலிஸார் செல்வதற்கு முன்னதாகவே, தேரர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டதால், தாம் அத்தகைய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லையென்று பொலிஸார் கூறினர்.

ஜனாதிபதியின் இதே உறுதிமொழியைத்தான் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் ஓமல்பே சோபித தேரரிடம் சில நாட்களுக்குமுன் கையளித்தனர்.



ஆனால், பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடமாட்டேன் என்று அறிவித்தால் - தான் சாகும் வரையான உண்ணாவிரதப் போரட்டத்தை கைவிடுவேன் என்று ஓமல்பே சோபிததேரர் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கம் ஏமாற்றினால் கடும் விளைவுகள் ஏற்படும்

## ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

கொழும்பு —

அரசாங்கம் தொடர்ந்தும் நாட்டு மக்களை ஏமாற்றுமாக விருந்தால் தாம் பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்னதேரர் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஜனாதிபதி மகாநாயக்கர்களிடம் பல விடயங்களில் உறுதிமொழிகளை வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் அந்த உறுதிமொழிகளை மீறி அவர் நடந்துகொள்வாராக இருந்தால், அதற்கு எதிராக தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அத்துரலிய ரத்னதேரர் குறிப்பிட்டார்.

# பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு தமிழகத்தில் எதிர்ப்பு!

கொழும்பு —

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு தமிழ்நாட்டில் எதிர்ப்பு உருவாகியுள்ளது.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்தை நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் - சென்னையில் நாளை நடைபெறவுள்ளது.

இது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் இயக்க பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில்- தமிழினத்துக்கு எதிராக இலங்கை அரசோடு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய அரசு முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்தகைய முயற்சியை கைவிட வேண்டுமென்று இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். இது குறித்து தமிழகத்தில் தமிழ்த்தேசிய அமைப்புக்களுடன் கலந்து பேசி, தமிழக மக்கள் சார்பில் எதிர்ப்பை தெரிவிக்க நளை சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும் எனத் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் இரகசியமான சதி முயற்சியல்ல!

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசங்களை புனரமைக்க அரசு ஏற்படுத்தவிருக்கும் பொதுக் கட்டமைப்பு இரகசியமான சதி முயற்சியல்ல என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இந்த விடயம் தொடர்பாக நாட்டின் சகல பிரஜைகளுக்கும் கருத்து தெரிவிக்கும் வாய்ப்பு ஏற்கவே வழங்கப்பட்டிருந்தது.

இது பற்றி எதிர்காலத்தில் மேலும் மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பௌத்த மகாநாயக்க தேரர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தாமல், உத்தேச சுனாமி நிவாரண திட்டத்தை அமுல்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் மகாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளவோ அல்லது அதில் நிலைத்திருக்கும் நோக்கத்துடனோ அரசாங்கம் செயற்படவில்லை.

நாட்டையும், இனத்தையும், மதத்தையும் காட்டிக் கொடுக்க அரசாங்கம் தயார் இல்லை.

எதிர்கால அரச தலைவர்களினதும், அரசாங்கத்தினதும் உரிமைகளையும் பொறுப்புக்களையும் குறிப்பிட்ட ஒரு சிலரின் அச்சுறுத்தலுக்காக காட்டிக்கொடுப்பதற்கு ஜனாதிபதி ஒருபோதும் தயாராக இல்லை.

இதனால் கடும் தீவிரவாதப் போக்குடையவர்களினதும், எதிர்ப்பு அரசியல்வாதிகளினதும் சந்தர்ப்பவாத குறிக்கோள்களைப் புரிந்து கொண்டு அமைதியாகவும், புத்தி சாதுர்யமாகவும் செயற்பட வேண்டும் என்று அரசாங்கம் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போர் நிறுத்த உடன்படிக்கை நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கை

கொழும்பு —

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கம் ஏற்படுத்திய போர்நிறுத்த ஒப்பந்தம், நாட்டைப் பிரிக்கும் ஒரு நடவடிக்கையே தவிர, தற்போது நிலவுகின்ற பிரச்சினைக்குத் தீர்வு அல்ல எனவும், எனவே அந்த ஒப்பந்தத்தத்தை நீக்குவதோ அல்லது அதனைத் திருத்துவதோ மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமையலாமென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஏற்படுத்திய போர் நிறுத்த ஒப்பந்தம் நன்மையானதோ அல்லது தீமையானதோ நாம் அதனைப் பாதுகாக்க வேண்டும்.

போர்நிறுத்தங்கள் குறித்து நாம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு அறிவுறுத்திய போதிலும், எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

அவர்களும் இது குறித்து ஒன்றும் செய்ய இயலாது. இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தால் நாட்டின் ஒரு பகுதியில் பாதுகாப்பற்ற நிலை தோன்றியுள்ளது. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூவினங்களும் நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லை.

மக்களின் எதிர்பார்ப்பு நிரந்தர சமாதானம், கீழ்த்தரமான போர்நிறுத்த ஒப்பந்தத்தால் நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை. அது நாட்டைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட ஆரம்ப கட்ட நடவடிக்கையாகும். அதனைத் திருத்த அல்லது விலக்க முடியாது. எங்களது நாட்டின் பாதுகாப்பை இந்தக் கடினமான நிலையிலேயே நடத்திச் செல்லமுடிகின்றதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## துப்பாக்கியுடன் இளைஞர் கைது

சிறுப்பிட்டியில் ரோந்து சென்ற படையினர் சொட்கண் துப்பாக்கியுடன் நின்ற இளைஞரெருவரை கைது செய்துள்ளதாக படைத் தலைமையகம் தெரிவித் துள்ளது.

கைது செய்யப்பட்டவர் சிறுப் பிட்டியைச் சேர்ந்த சின்ன பூத யன் சிவேந்திரன் (வயது 28) எனவும் இவரும் இவரிடமிருந்து கைப்பற்றப் பட்ட சொட்கள் துப்பாக்கியும் மேலதிக விசாரணைக்காக அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் படைத்தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

# சுனாமி நிதிக்கான கிரிக்கெட்: இன்று லோட்ஸ் மைதானத்தில்!

லண்டன் —

சுனாமி நிவாரண கிரிக்கெட் போட்டி இன்று லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் எம்.சி.சி. லெவன் - உலக லெவன் அணிகள் மோதுகின்றன. எம்.சி.சி. அணிக்கு நியூஸிலாந்து வீரர் பிளெமிங் கப்டனாகவும், உலக லெவனுக்கு லாறா கப்டனாகவும் உள்ளனர்.

எம்.சி.சி. அணியில் மேற்கிந்திய வீரர் சர்வான் விலகியதால் அவருக்குப் பதிலாக இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலி சேர்க்கப்பட்டுள்ளார். இந்த அணியில் லக்ஷ்மன், கும்ளே, கலிஸ், முரளிதரன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

உலக லெவன் அணியில் அதிரடி ஆட்டக்காரர்களான ஷேவாக், ஜெயசூர்ய மற்றும் ராவிட், ஷேன் வோன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். சுனாமி கிரிக்கெட் போட்டி இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 3.45 மணிக்கு லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு அணி வீரர்கள் விபரம் வருமாறு -

எம்.சி.சி. லெவன் - பிளெமிங் (கப்டன்), கங்கூலி, லக்ஷ்மன், கைல், கலிஸ், அன்டி பிளவர், சங்கஹாரா, கும்ளே, முரளிதரன், அக்தர்.

உலக லெவன் - லாறா (கப்டன்), ஷேவாக், ராவிட், ஜெயசூர்ய, சிமித், சந்தர்போல், கிறிஸ் கெய்ன்ஸ், ஷேன் வோன், வாஸ், மொகமட் சமி, என்ரினி.

# ஒரு நாள் பயிற்சி ஆட்டங்களில் அவுஸ்ரேலியா, இங்கிலாந்து வெற்றி



சவுதாம்டன் —

ஒருநாள் பயிற்சிப் போட்டியில் இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் வெற்றிபெற்றன.

இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, பங்களாதேஷ் அணிகளுக்கிடையே எதிர்வரும் 18ஆம் திகதி முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக 3 அணிகளும் கவுண்டி அணிகளுடன் பயிற்சிப் போட்டிகளில் பங்கேற்றுவருகின்றன. சவுதாம்டனில் நடந்த போட்டியில் இங்கிலாந்து, ஹாம்ஷயர் அணிகள் மோதின.

முதலில் ஆடிய இங்கிலாந்து 72 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது. இந்தநிலையில், ஸ்ரரஸ் 85, பீற்றர்சன் 77 ஓட்டங்களைக் குவித்தனர். பின்னர் வந்தவர்கள் ஓட்டங்களைக் குவிக்கத் தவற, இங்கிலாந்து 49.4 ஓவர்களில் 238 ஓட்டங்களை மட்டுமே எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.



239 என்ற எளிய இலக்கை விரட்டிச் சென்ற ஹாம்ஷயர் இங்கிலாந்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல் திணறியது. இந்த அணியின் மூத்த வீரரான டரன்கோ, வரிசையாக மக்மிலன், கிராவ்லி, பென் ஹம் ஆகிய மூவரையும் வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைத்தார். முடிவில் 19.5 ஓவர்களில் ஹாம்ஷயர் 85 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதன் மூலம் இங்கிலாந்து 153 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.




மற்றொரு போட்டியில் அவுஸ்ரேலியா-லீசெஸ்டர் அணிகள் மோதின. இதில் அவுஸ்ரேலியா 321 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ஹைடன் 107, மார்ட்டின் 85, சைமன்ட்ஸ் ஆட்டமிழக்காமல் 92 ஓட்டங்களை எடுத்தனர். இந்த வலுவான இலக்கை எட்டமுடியாமல் லீசெஸ்டர் அணி 226 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் அவுஸ்ரேலியா 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

## விளையாட்டு

# டெஸ்ட் தரவரிசைப் பட்டியல்: அவுஸ்ரேலியா முதலிடத்தில்!




லண்டன் —

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி தொடர்ந்து அவுஸ்ரேலியா டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. இங்கிலாந்து 2ஆவது இடமும், இந்தியா 3ஆவது இடமும், பாகிஸ்தான் 4ஆவது இடமும், இலங்கை 5ஆவது இடமும், தென்னாபிரிக்கா 6ஆவது இடமும், நியூஸிலாந்து 7ஆவது இடமும், மேற்கிந்தியத் தீவுகள் 8ஆவது இடமும், சிம்பாப்வே 9ஆவது இடமும், பங்களாதேஷ் 10ஆவது இடமும் பிடித்துள்ளன.


துடுப்பாட்ட வரிசையில் லாறா (மேற்கிந்தியத் தீவுகள்) முதலிடம் வகிக்கிறார். கலிஸ் (தென்னாபிரிக்கா) 2ஆவது இடமும், ராகுல் ராவிட் (இந்தியா) 3ஆவது இடமும், ரிக்கி பொண்டிங் (அவுஸ்ரேலியா) 4ஆவது இடமும், கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா) 7ஆவது இடமும், இன்சமாம் (பாகிஸ்தான்) 8ஆவது இடமும், சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள்) 9ஆவது இடமும், ட்ரெஸ்கொதிக் (இங்கிலாந்து) 10ஆவது இடமும் பிடித்துள்ளனர்.



இந்திய வீரர் டெண்டுல்கர் 12ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

பந்துவீச்சு வரிசையில் மக்ரா (அவுஸ்ரேலியா) முதலிடமும், முரளிதரன் (இலங்கை) 2ஆவது இடமும், பொலக் (தென்னாபிரிக்கா) 3ஆவது இடமும், என்ரினி (தென்னாபிரிக்கா) 4ஆவது இடமும், ஷேன் வோன் (அவுஸ்ரேலியா) 5ஆவது இடமும், சொகைப் அக்தர் (பாகிஸ்தான்) 6ஆவது இடமும், கும்ளே (இந்தியா) 7ஆவது இடமும், அன்ட்ரூ நெல் (தென்னாபிரிக்கா) 8ஆவது இடமும், மத்தியூ ஹொகாட் (இங்கிலாந்து) 9ஆவது இடமும், ஜிலெஸ்பி (அவுஸ்ரேலியா) 10ஆவது இடமும் பிடித்துள்ளனர்.

# முகமது அலியின் மகள் குத்துச் சண்டை சம்பியன்!





வொஷிங்டன் —

வொஷிங்டனில் சனிக்கிழமை நடைபெற்ற மகளிர் குத்துச்சண்டைப் போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்த லைலா அலி உலக குத்துச்சண்டை கவுன்சில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

எதிர்த்துப் போட்டியிட்ட எரின் டாகில்லை 3ஆவது சுற்றிலேயே இவர் நிலைகுலையச் செய்தார். முதல் 2 சுற்றுகளில் ஆதிக்கம் செலுத்திய லைலா, 3ஆவது சுற்றில் கடுமையான முறையில் டாகில்லைத் தாக்கினார். ஒரு மூலையில் வைத்து அடுத்தடுத்து 20 முறை டாகிலை குத்திக் கொண்டே இருந்தார்.

இதை அறிந்த நடுவர், ஆட்டத்தை நிறுத்தி லைலா வெற்றிபெற்றதாக அறிவித்தார்.

இதனால் 1 நிமிடம் 59 வினாடிகளில் முடிவுற்றது மூன்றாவது சுற்று.

ஆட்டத்தைக்காண அலியின் தந்தையும், முன்னாள் உலக குத்துச்சண்டைச் சம்பியனுமான முகமது அலி வந்திருந்தார். அவரது வருகைக்கு பெருமை சேர்க்கும் விதமாக முதன் முதலாக உலகக் குத்துச்சண்டை கவுன்சில் சம்பியன் பட்டத்தை வென்றார் லைலா.

லைலா வெற்றிபெற்றதும், குத்துச்சண்டைக் களத்துக்குச் சென்று லைலாவைக் கட்டியணைத்து, முத்தம் கொடுத்து வாழ்த்தினார் முகமது அலி.

# இர்பான் பதானுக்கு காயம்!


லண்டன் —

கவுண்டியில் விளையாடும் இர்பான் பதானுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் இவர் ஒரு வாரத்துக்கு போட்டிகள் எதிலும் பங்கேற்கமுடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வீரர்கள் இங்கிலாந்தின் கவுண்டி அணியில் விளையாடி வருகின்றனர். மிடிலசெக்ஸ் அணிக்காக பதான் பங்கேற்கிறார். இவருக்கு தோள் பகுதியில் காயம் ஏற்பட்டிருப்பதாக மிடிலசெக்ஸ் அணியின் கப்டன் பென் ஹட்டன் தெரிவித்தார். காயம் காரணமாக அடுத்த ஒரு வாரத்துக்கு பதான் பந்துவீச வாய்ப்பு இல்லை என்றார் ஹட்டன்.



# இறுதிப் போட்டியில் மரியா ஷரபோவா!



பர்மிங்ஹாம் —

கிளாசிக் ரெனிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா தகுதி பெற்றுள்ளார்.

இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. அரையிறுதியில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா 7-5, 6-1 என்ற நேர் செட்களில் பிரான்சின் நாடியானா கலோவினை வீழ்த்தினார். இறுதிப் போட்டியில் இவர் சேர்பியாவைச் சேர்ந்த ஜெலினா ஜங்கோவிக்கைச் சந்திக்கிறார்.



மொஸ்கோவில் ஐரோப்பிய ரிதமிக் ஜிம்னாஸ்டிக் சம்பியன்ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் ஈஸ்டோனியா வீராங்கனை மரிய பிலிப்போவா தனது உடலை வில்லாக வளைத்து பார்வையாளர்களை அசத்தினார்.

# சம்பியனானார் ரோஜர் பெடரர்!



ஜேர்மனி —

ஜேர்மனியின் ஹாலே நகரில் நடைபெற்ற ரெனிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் உலகின் முதல்நிலை வீரரான ரோஜர் பெடரர், மராட் சபீனுடன் மோதினார். இதில் பெடரர் 6-4, 6-7, 6-4 என்ற நேர் செட்களில் சபீனைத் தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றார்.



ஒஸ்ட்ரவா நகரில் நடந்த சர்வதேச தடகளப் போட்டிகளில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பிரிவில் மற்ற வீரர்களை பின்னுக்குத் தள்ளி ஜமெக்கா வீரர் அசாபா பவல் (நடுவில்) முதலிடம் பெற்றார். இவர் 9.85 வினாடிகளில் இந்தத் தூரத்தைக் கடந்தார்.

# இலத்திரனியல் ஊடகங்களினால் வாசிப்புப் பழக்கம் குறைகிறது!

## கவிஞர் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம்

இன்று எமது தேசத்தில் இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பால் வாசிப்புப் பழக்கம் நாளுக்குநாள் குறைவடைந்து கொண்டு செல்கிறது. இந்த நிலை தொடருமானால், காலப் போக்கில் இலக்கியப் படைப்புகளை வாசிப்பதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள் என கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

நாவலர் சலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சிறுகதை எழுத்தாளர் எஸ்.பி.கிருஷ்ணனின் 'இனி வசந்தகாலம்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்த் தேசியத்தின் முக்கியமான படைப்பாளிகள் தேசத்தின் விடிவுக்கான படைப்புகளாகவே தமது படைப்புகளை வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.


இன்று எமது இளைய தலைமுறையினர் எங்கேயோ சென்றுகொண்டிருக்கின்றனர். இதற்கான முக்கிய காரணம் -இன்று இலத்திரனியல் ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுவரும் தென்னிந்திய தொலைக்காட்சித் தொடர்களே ஆகும்.

இளையவர்கள் தென்னிந்திய சின்னத் திரைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து யாழ்ப்பாணம் மிக விரைவில் விடுதலை பெற்றுவிடும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

ஈழத்தில் இன்று 36 ஆயிரம் கலை இலக்கியப் படைப்பாளிகள் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரது படைப்புகளும் ஒவ்வொருவிதமானவை. இன்றைய சூழலில் இலக்கியப் படைப்பாளர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. அவற்றுக்கான மாற்று நடவடிக்கைகள் எடுப்பதும் இல்லை.

படைப்பாளிகள் தொடர்ந்து தமது படைப்புகளைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். எழுத்தாளர்கள் ஒவ்வொருவரினதும் படைப்புகள் சமூகத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கை ஆற்றிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து படைப்பாளிகள் தமது படைப்புகளை சமூகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கைச் செலுத்தக்கூடியவாறு படைப்புகள் படைக்கப்படவேண்டும்.

இன்று படைப்பாளிகளை வர்த்தக வர்க்கத்தினாலும் சுரண்டிக்கொண்டு இருக்கின்றார்கள். இலக்கியப் படைப்பாளிகள் வெளியீடு செய்கின்ற நூல்களைச் சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.



நூல் ஒன்று விற்பனை செய்யும்போது 40 வீதமான விலைக் கழிவை விற்பனை நிலையங்கள் பெற்றுக்கொள்கின்றன. இதனால் படைப்பாளிகள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலை முற்றாக மாறவேண்டும். இன்றைய காலத்தில் வாசகர்களின் வாசிப்பைத்தூண்டக்கூடிய வகையில் படைப்புகள் வெளிவரவேண்டும். இதனாலேயே வாசகர்களின் தொகையை அதிகரிக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புனரமைப்பு

அரியாலை

அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கான புனரமைப்புப் பணிகள் சங்கத்தின் நிதியைக் கொண்டு புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியானதும் - கிராமிய வங்கிக் கிளையும் திறக்கப்படவுள்ளதாக அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் ச.புஸ்பராஜா தெரிவித்துள்ளார்.

# மதிப்பீட்டுப் படிவம் அதிபர்களிடம் கையளிப்பு

ஆழியவளை

பாடசாலைத் தொகை மதிப்புச் செய்வதற்கான படிவங்கள் - அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைக்கும் இரு பட்டோலைகளும், போதுமான அளவு ஆசிரியர் படிவங்களும் வழங்கப்பட்டுள்ளன.

2005 ஜூன் 1 ஆம் திகதி அன்று உள்ளவாறு விபரங்களைப் பூரணப்படுத்தி, இந்த மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக்கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (122)




# உலக வங்கியின் நிதியுதவியுடன் நெடுந்தீவிலும் வீட்டுத்திட்டம்

நெடுந்தீவு

உலகவங்கியின் நிதி உதவியுடன் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் -நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவிலும் முப்பது குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பிரதேச ஜே/01, ஜே/02, ஜே/06 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் முறையே கோட்டைக்காடு, புதுக்குடியிருப்பு, செபநாயகபுரம் ஆகிய கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு, அங்கு வசிக்கும் குடும்பங்களில் முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்காக, ஒவ்வொரு கிராமத்திலும் தலா பத்து குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர் விபரங்கள் பொதுமக்களது பார்வைக்காக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மற்றும் கிராம அலுவலர் பணிமனையிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# சண்டிலிப்பாய் பிரதேச கடற் தொழிலாளருக்கு கெயார் நிறுவனத்தால் கடற்தொழில் உபகரணங்கள்

சண்டிலிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கடற்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கெயார் நிறுவனம் கடற்றொழில் உபகரணங்களை வழங்கவுள்ளது.

படகு வெளி இணைப்பு இயந்திரம், வலை போன்ற கடற்றொழில் உபகரணங்கள் என ஒருவருக்கு தலா 4 லட்சம் ரூபா பெறுமதியுள்ள கடற்தொழில் உபகரணங்கள் 170 பேருக்கு வழங்கப்படவுள்ளன.

சென் லூர்த்துமேரி கடற்தொழில் சங்கத்தில் 33 பேருக்கும், சென் தோமஸ் கடற்தொழில் சங்கத்தில் 65 பேருக்கும், சென் ஜோசப் கடற்தொழில் சங்கத்தில் 15 பேருக்கும், ராஜ ராஜேஸ்வரி கடற்தொழில் கடற்தொழில் சங்கத்தில் 15 பேருக்கும் -

துறைமுக விநாயகர் கடற்தொழில் சங்கத்தில் 10 பேருக்கும், உதயதாரகை கடற்தொழில் சங்கத்தில் 5 பேருக்கும் மாரிசன்கூடல் கடற்தொழில் சங்கத்தில் 20 பேருக்கும், போயிட்டி கடற்தொழில் சங்கத்தில் 5 பேருக்கும் என வழங்கப்படவுள்ள என கெயார் அமைப்பின் திட்டப் பணிப்பாளர் சு.கருணாகரன் தெரிவித்தார். (20)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை பத்து



பெயர் : க. துவாரகா
முகவரி : குருநகர்.


## வை.எம்.சி.ஏயின்

# 150ஆவது ஆண்டு நிறைவு விழா யாழில் நடத்துவதற்கு ஏற்பாடு!

உலக நாடுகளில் வை.எம்.சி.ஏ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 150 ஆண்டு நிறைவெய்தியமையை குறிக்கும் விழா- எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, வை.எம்.சி.ஏ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விழாவை - யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நவாலி வை.எம்.சி.ஏ இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இந்த விழாவில் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த வை.எம்.சி.ஏ யின் அறுபது பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவின் இறுதி நாளில் -சிரமதானம், வை.எம்.சி.ஏயின் முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்ச்சிகள், பயிற்சிப் பட்டறை, சான்றோர்களைக் கௌரவித்தல், மத நிகழ்வுகள் போன்ற பல நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (100)


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# க.பொ.த சாதாரணதர பரீட்சை விண்ணப்பங்கள் அனுப்பி வைப்பு

ஆழியவளை

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை - 2005 டிசம்பரிற்குரிய விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து 2005 ஜூலை மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஒரு பாடத்துக்கு 25 ரூபாவும், இரண்டு பாடங்களுக்கு 30 ரூபாவும், மூன்று பாடங்களுக்கு 35 ரூபாவும், நான்கு பாடங்களுக்கு 40 ரூபாவும், ஐந்து பாடங்களுக்கு 55 ரூபாவும், 6 முதல் 10 வரையான பாடங்களுக்கு 70 ரூபாவும் செலுத்தவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (122)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அடையாள எதிர்ப்பு போராட்ட நிகழ்விலிருந்து...
















# அதிமின்வலு மார்க்கம் சிறுவர்களுக்கு ஆபத்து

அதிவலு மின் கேபிள்கள் செல்லும் மார்க்கத்தின் அருகில் இருப் போர்களில் சிறுவயதிலேயே இரத்தப் புற்று நோய்க்கு உள்ளாகும் சாத்தியம் அதிகம் என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வுக் குழு ஒன்று கண்டறிந்துள்ளது.




ஆய்வு ஒன்றில் இத்தகைய மின் மார்க்கங்களுக்கு 200 மீற்றர் சுற்று வட்டத்தில் இருக்கும் பிள்ளைகளில் காணப் படும் நோய்த்தாக்கம் 70 வீதம் அதிகமாக, 600 மீற்றர் தொலைவில் இருக்கும் பிள்ளைகளை விடக்காணப்பட்டுள்ளது. எனினும் இதற்கு இன்னமும் உறுதியான உயிரியல் சான்று எதுவும் கண்டறியப்பட வில்லை எனவும் அவர்கள் கூறுகின்ற னர்.

29 ஆயிரம் புற்றுநோய் பீடித்த சிறுவர்களில் இந்த ஆய்வு மேற் கொள் ளப்பட்டுள்ளது. இவர்களில் 64 பேர் 200 மீற்றர் சுற்றுவட்டத்தினுள் வசித்தவர்கள். 358 பேர் 200 முதல் 600 மீற்றர் சுற்று வட்டத்தினுள் வசித்தவர்கள் ஆவர்.

# அரிவாளுரு குருதிக் கலம் மலேரியாவை எதிர்க்குமா?


அரிவாளுரு செல் குருதிக்கலங்களைக் கொண்டவர்களில் மலேரியா ஒட்டுண்ணியால் தாக்குதலை ஏன் நடத்த முடியாதுள்ளது என்பதற்கான காரணத்தை முழுமையாகக் கண் டறிய முடியா துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக் கின்றனர்.



எனினும் வழமைக்கு மாறான இந்த அரிவாளுரு செல் குருதிக் கலங்களில் மலேரியா ஒட்டுண்ணி நுழைந்து வாழ முயலும்போது அது சடுதியாக துண்டு துண்டாகி விடுவதால், ஒட்டுண்ணியால் அதில் தங்கி வாழமுடியாத நிலையில் மலேரியாத்தாக்கம் அகலுவதாகச் சிலர் கூறுகின்றனர். தற்போது கென்யாவில் சுமார் 1000 மலேரியா தாக்கிய சிறுவர்களில் நடத்திய ஆய்வில் அரிவாளுரு செங்குருதிக்கலங்கள் உடையவர்களில் காணப்படும் ஒருவித எதிர்ப்பு நிணநீர்த்தன்மையே மலேரியா நோய் தடுப்புக்குகாரணமாக இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. எனினும் முழுமையான முடிவுக்கு வர மேலும் ஆய்வுகள் தேவை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

# பருவ மாற்றத்திற்கான ஜீன் ஈயில் கண்டுபிடிப்பு


பழ ஈ முத்திர்ச்சியடைவதற்குக் காரணமாக இருக்கும் பரம்பரையலகைக் கண்டு பிடித்ததன் மூலம், மனிதனிலும் எவ்வாறு பருவமாற்றங்கள் ஏற்படுகிறது என்பதை இனிமேல் கண்டறிய முடியும் என அமெரிக்க உற்றா பல்கலைக்கழ ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். குழந்தைகள் எவ்வாறு இளைஞர்களாக மாறுகின்றனர் இதற்குக் காரணமான பரம்பரை அலகின் தொழிற்பாடு என்ன என்பது இனித் தெளிவாகும் என்கின்றனர் இவர்கள்.





பழஈயில் (**Fruit fly**) பருவமாற்றித்திற்குக் காரணமான **DHR4** என்ற ஜீன் கண்டுபிடிக்கப் பட்டதைக் தொடர்ந்து அந்தப் பூச்சி - குடம்பிப் பருவத்திலிருந்து நிறைவுடலி பருவத்துக்கு மாறுவதற்கான ஓமோன்களும் கண்டறியப்பட்டுள்ளது. எனினும் மனிதனல்லாத விலங்குகளில் செய்யப்படும் ஆய்வு முடிவுகளை அப்படியே மனிதனில் ஒப்பிட்டுப்பார்க்க முடியாது என்பதையும் அந்த ஆய்வாளர்கள் எச்சரிக்கையுடன் கூறுகின்றனர்.

# அணுசக்தி மணிக்கூடு; 50 ஆம் பிறந்தநாள்

இதுவரையில் நிற்காமல் ஓடிய உலகின் முதல் அணுசக்தி மணிக்கூடு தனது 50 ஆவது பிறந்த நாளை கடந்த வாரம் கொண்டாடியது. பிரிட்டனின் தேசிய பௌதிகவியல் ஆய்வுகூடத்திலுள்ள இந்த மணிக் கூடு- இதுவரை நேரம் பிசகாது ஓடி வருகிறது. உலகம் முழுவதும் நேரம் காக்கும் கடமைக்கு இதுவே








கண்காணிப்பு இணைப்பாளராகச் செயற்படுகிறது. லண்டனின் பிரபல பிக்பென் (**Big ben**) மணிக் கூட்டுக் கோபுரத்தின் நேரத்தையும் இந்த அணு சக்தி மணிக் கூடே பேணுகிறது.

1995 ஆம் ஆண்டில் கலாநிதி லுயின் எசன் என்பவரால் இது உருவாக்கப்பட்டது. எனினும் இதற்கான யோசனை 1879 ஆம் ஆண்டில் கெல்வின் பிரபுவினாலேயே முன்வைக்கப்பட்டது.

# பிரபஞ்சத் தோற்றம் கம்பியூட்டரில் வடிவமைப்பு




தற்போது பிரபஞ்சம் (**Universe**) எவ்வாறு இந்தத் தோற்றத்தை அடைந்தது என்பதைக் கண்டறிய விண்ணியலாளர்கள் சுப்பர் கொம்பியூட்டர்களை உபயோகிக்கவுள்ளனர். இதன் மூலம் பிரபஞ்சத் தோற்றத்தை உருவாக்க முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

நாம் பிரபஞ்சம் குறித்து அண்மைக்காலத் தகவல்களையே கொண்டுள்ளோம். எனினும் அதிக விரைவு சுப்பர் கொம்பியூட்டர்கள் மூலம் வானியலின் முழு வரலாற்றையே திருப்பிக் கொண்டுவர முடியும் என இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ள பிரிட்டனின் டுர்ஹம் பல்கலைக்கழக பௌதிகவியல் பேராசிரியர் கார்லோஸ் பிராங் கூறுகிறார்.

பெருவெடிப்புக்கொள்கை அடிப்படையில் குளிந்த, இருண்ட ஒரு பொருளே முதலில் உருவானதாகவும், அது பின்னர் தனித்தனி பிரபஞ்சங்களாக நிறைகளுக்கு ஏற்ப பிரிந்து சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதன் அடிப்படையில்தான் கம்பியூட்டரும் வரலாறை மீள உருவாக்கவுள்ளது.

# முட்டையிலிருந்து மருந்து



பரம்பரையலகு பொறிமுறை மூலம் சீர்செய்யப்பட்ட கோழிகளின் (Genetically Modified) முட்டையின் வெள் ளைக்கருவில் காணப்படும் பெரியளவிலான புரதம் புற்றுநோய்ச் சிகிச்சைக்கு உகந்தது என எடின்பரோ ரொஸ்லின் நிறுவன விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்தப் புரதத்தில் காணப்படும் ஒருவகை எதிர்ப் புச்சத்து தோல் புற்றுநோய்ச் சிகிச்சைக்கு உபயோகமானது எனக் கூறப்படுகிறது.


முன்னதாக மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஆய்வில் இந்த வகைக் கோழிகளின் (Designer Chickhens) முட்டைகளால் ஓர ளவு சிகிச்சைப் பலனே காணப்பட்டது. எனினும், மேற்கொண்டு செய்த புதிய தொழில்நுட்பங்களால் அதிகளவு புரதம் கிடைக்கக்கூடியவாறு இந்தமுட்டைகள் மாற்றப்பட்டுள்ளன.

# திரை விமர்சனம்

## காதல் செய்ய விரும்பு

காதலர்களுக்கு ஏற்றவாறு காதல் தன் முகத்தை மாற்றுகிறது என்ற கருத்தைக் கூறும் திரைப்படம்.

கல்லூரி மாணவன் சந்தோஷ் தன்னுடன் கூட கற்கும் ஸ்ரீஷாவை காதலிக்கிறார். ஆனால் திருமணத்துக்கு முன் வரம்பு மீற முயலும் சந்தோஷின் முயற்சி கண்டு காதலை வெட்டிவிடும் ஸ்ரீஷா. தொடர்ந்து பழையகதையில் ஏன் சந்தோஷ் இவ்வாறு நடக்க முயற்சிக்கிறார் எனக்கூறப்படுகிறது.



புதிய முகமான சந்தோஷின் நடிப்பும் முகபாவமும் சிறப்பாக உள்ளது. ஸ்ரீஷா கதைப்பதைவிட பாடல்காட்சியில் நடனம் ஆடுவதில்தான் கூடுதல் கவனம் எடுத்துள்ளதாகத் தெரிகிறது. உலகநாதனர்க வரும் கருணாஸ் இடையிடையே சிரிக்கவைக்கிறார். உயர்கல்லூரிகளிலும் சீருடை கொண்டுவந்தால், ஏழை மாணவிகளுக்கு நல்லது என்ற கருத்தை நாசூக்காக சொல்ல விழைகிறார் இயக்குனர் பார்கவன்.

எனினும் சொல்லவந்ததை பழஞ்சோறு போல் தந்ததே கரிக்கிறது. வசனம் திரைக்கதை இயக்கம் படத்தை பாடாய் படுத்துகிறது.

# திமிங்கலங்களை கடல் ஏற்றிய அவுஸ்ரேலியர்கள்



மேற்கு அவுஸ்ரேலியாக் கடற்கரையில் கும்பலாகக் கரையொதுங்கிய திமிங்கிலங்களை (Killer Whales) தொண்டர்கள் மீண்டும் தள்ளிச் சென்று கடலில் விட்டுள்ளனர்.

அரசு விடுத்த அவசர அறிவிப்பைத் தொடர்ந்து, நூற்றுக் கணக்கில் கடற்கரைக்குச் சென்ற மக்கள் திமிங்கலங்களை மீண்டும் கடலுக்குள் தள்ளிச் செல்வதில் ஆர்வமாகவும், தீவிரமாகவும் ஈடுபட்டனர். எனினும் இதில் ஒரு திமிங் கலம் இறந்துள்ளது.

டொல்பின் இனத்தைச் சேர்ந்த இந்தத் திமிங்கலங்களில் மணல் அப்புவதைத் தடுப்பதற்காகப் பலர் இவற்றைச் சுமந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

தாம் புரிந்த இந்தப் பணியை மறக்கமுடியாது என பலரும் மகிழ்வுடன் பின்னர் தெரிவித்தனர்.

பாரமான இந்த மீன்கள் குழப்பம் அடைந்த நிலையில் எமக்கு எதிர்த்திசையாகவே நகர முயற்சித்தன.

எனினும் சிரமப்பட்டு அவற்றைக் கடல் பக்கமாகத் தள்ளிச்சென்று காப்பாற்றிவிட்டோம் என திருப்தி பொங்க அவர்கள் தெரிவித் தனர்.

# திமிங்கல இறைச்சி கொரியாவில் எதிர்ப்பு

தென்கொரியாவின் உல்சன் நகரில் அமையவுள்ள திமிங்கல இறைச்சித் தயாரிப்பு தொழிற்சாலைப் பகுதியில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்பான கிறீன் பீஸ் நிறுவனத் தொண்டர்கள் குவிந்து வருகின்றனர். இந்தத் தொழிற்சாலையை அமைக்க விடாது இந்தப் பகுதியில் இவர்கள் மறியல் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.





திமிங்கலங்களை கொல்வது சர்வதேச சட்டத்தால் 1986 ஆம் ஆண்டு முதல் தடைசெய்யப்பட்டுள்ள தாயி னும், சில நாடுகள் விஞ்ஞானப் பரிசோதனை என்ற பெயரில் திமிங் கல வேட்டையை (Whaling) நடத்தி வருகின்றன. நோர்வே, ஐஸ்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளே உலகில் திமிங்கல வேட்டையில் கொள்ளை லாபம் சம்பாதிக்கின்றன.

தென்கொரியாவில் முன்னர் திமிங் கல இறைச்சி பிரபலமாக இருந்த போதிலும், சர்வதேசத் தடையின் பின் இதை உட்கொள்வது குறைந்துள்ளது. எனினும் சில கொரிய மீனவர்கள் தற்செயலாகத் தம் வலையில் சிக்கியதாக்கக் கூறி, இப்போதும் திமிங்கலங்களை பிடிக்கின்றனராம்.

# கம்பியூட்டரைத் தாக்கும் ஓசாமா பின்லேடன்!

ஒசாமா பின்லேடன் கைதானதாக வரும் ஈ - மெயில் செய்திகளைத் திறக்கவேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. மேற்குலகை ஆட்டிப்படைக்கும் லேடன் தற்போது கம்பியூட்டர்களையும் கலக்குகிறாரா?

ஒசாமாவின் படத்துடன் அவர் கைதானதாக வரும் ஈ - மெயில்



செய்திகளைத் தமது கணினிகளில் எவரும் திறந்து ஆர்வத்துடன் வாசிக்க முற்பட்டால் மைக்ரோசொப்ட் வின்டோஸ் வைரஸால் தாக்கப்படுவது உறுதி. இதனால் கணினியின் சகல தரவுகளும் அழியும்.

கடந்த முதலாம் திகதிமுதல் பலர் இதனால் பாதிப்புற்றுள்ளனர். ஒசாமாவைப் பற்றி அறியும் ஆவலில் பலர் இந்தப் பொறியுள் சிக்குவதாகப் பாதுகாப்பு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் செய்திகளில் ஒசாமா கைதாகிவிட்டதாகவும், இதுகுறித்த படங்கள் வெளிவரவுள்ளதாகவும் ஆசைகாட்டி கொம்பியூட்டரைச் செயலிழக்க வைக்கின்றனர்.

# அழிந்த விலங்கை காக்க தேடல்



உலகிலிருந்து அழிந்துவிட்ட இனமாகக் கருதப்படும் டஸ்மானியா புலி (Tasmania Tiger) இன்னமும் உயிர்வாழ்வதாக சில ஆய்வாளர்கள் நம்புகின்றனர். எனினும் இது வெறும் நம்பிக்கை தான் என்பதையும் அவர்கள் ஏற்கின்றனர். ஒரு காலத்தில் அவுஸ்ரேலியாவின் தென்கோடித் தீவான டஸ்மானியாவில் காணப்பட்ட



இந்த விலங்கு, இறுதியாக 1936 ஆம் ஆண்டில் விலங்குக் காட்சிச் சாலையில் இருந்த ஒன்று இறந்ததுடன், பூமியில் இருந்த கடைசி டஸ்மானியாப்புலியும் இறந்துவிட்டதாகக் கருதப்பட்டது.

எனினும், டஸ்மானியாக் காட்டில் ஒன்றிரண்டாக இவை எஞ்சி ஒளிந்துவாழலாம் என சில வனவிலங்கு ஆர்வலர்கள் கூறுகின்றனர். இந்த விலங்கைப் படம்பிடித்துத் தருபவர்களுக்கு ஒரு மில்லியன் டொலர் பரிசு என அவுஸ்ரேலிய முன்னணி செய்தி சஞ்சிகை ஒன்று அறிவித்துள்ளது. கால் நடைகளைக் கொல்வதாகக்கூறி, ஒரு காலத்தில் அதைத் தேடித்தேடி அழித்த அவுஸ்ரேலியர்கள், அதை வாழவைக்க இப்போது தேடிக்கொண்டிருக்கின்றனர்.

# அரசியல் நகர்வுகளுக்கு ஏற்றவகையில் மக்கள் தம்மை தயார்படுத்த வேண்டும்

## முல்லைத்தீவு மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வம்

முல்லைத்தீவு —

சமாதான காலத்தில் எமக்கு கிடைக்கவேண்டிய அல்லது எதிர்பார்த்த வாழ்வு கிடைக்காத பட்சத்தில், இன்று நடந்துகொண்டிருக்கின்ற செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டு நாம் அடுத்தகட்ட நகர்த்தலுக்குத் தயாராக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென முல்லைத்தீவு மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வம் தெரிவித்தார்.

கற்சிலைமடு பிரதேசத்தில் இடம்பெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக இந்தப் பிரதேசம் எதிரியுடைய அச்சுறுத்தல் பிரதேசமாக காணப்பட்டது. அந்தக் காலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து பல துன்ப துயரங்களைச் சந்தித்து இருந்தும்கூட, உணவு வழங்கும் பிரதேசமாக இந்தப் பிரதேசம் விளங்கியது.

உணவு வழங்கும் பிரதேசம் என்ற வகையிலும், விவசாயப் போர் என்ற ரீதியிலும் அன்றைய காலகட்டத்தில் இராணுவத்தினுடைய எறிகணை வீச்சின் மத்தியிலும் முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து, போராட்டத்துக்கு மிகவும் உந்துசக்தியாக விளங்கியது.

இந்தப் பகுதி மக்கள் அனைவரும் எல்லைப்படையாகவும், கிராமியப் படையாகவும் அணிதிரண்டு, ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நிலைகொண்ட இராணுவத்தைக் கலைத்தனர். இன்று எதிரி வெளியேறியதால் சமாதானச் சூழல் ஏற்படுத்தப்பட்டது.

இந்த சமாதான காலத்திலே எமக்குக் கிடைக்கவேண்டிய அல்லது எதிர்பார்த்த வாழ்வு கிடைக்காத பட்சத்தில், இன்று நடந்து கொண்டிருக்கின்ற விடயங்களை அவதானித்துக் கொண்டு நாம் அடுத்தகட்ட நகர்தலுக்குத் தயாராக வேண்டிய நிலை ஏறபட்டுள்ளது.

இந்தவகையில் இந்தப் பிரதேசத்தில் எவ்வாறாக நாம் மக்கள் **எழுச்சியை ஏற்படுத்தி எதிரியின் இன்றைய அரசியல் நகர்வுகளை இராணுவ நகர்வுகளை முறியடிக்க வேண்டும். என்று ஆராய்ந்து ஒரு தெளிவான முடிவை எடுத்து, எதிர்வரும் அரசியல் நகர்வுகளுக்கு ஏற்றவகையில் எமது மக்களை தயார்படுத்த வேண்டும். இந்த தயார் படுத்தல் மூலம் எதிரியினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும்** என மேலும் தெரிவித்தார்.

# பெரியகுளம் பகுதியில் கிராமதரிசன நிகழ்வு

வட்டக்கச்சி —

வட்டக்கச்சி - பெரியகுளம் பகுதியில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து கிராம தரிசன நிகழ்வு ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வு வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் சுடர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இடம்பெற்றது.

தொடர்ந்து பிற்பகல் 5 மணியளவில் பெரியகுளம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கருத்துரைகளை வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் சுடர், அரசியல்துறையின் நடுவப் பணியகத்தைச் சேர்ந்த அன்ரனி ஆகியோர் நிகழ்த்தினர்.

(9)

## உடுத்துறை மகாவித்தியாலயத்தில்

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமாறு மாணவர்கள் தரப்பில் கோரிக்கை

உடுத்துறை —

வடமராட்சிக் கிழக்கு - உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையினால், மாணவர்கள் கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் - கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

அதேவேளை மார்கழிமாதம் கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இதுவரை விஞ்ஞான பாடம் கற்பிக்கப்படவில்லை என கவலை தெரிவித்த மாணவர்கள் இதனால் தாங்கள் விஞ்ஞான பாடத்தை கற்பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவித்தார்.

இதை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து தமது கல்வி செயற்பாட்டுக்கு ஆவன செய்யுமாறு மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அபிவிருத்திக் கலந்துரையாடல்

மருதங்கேணி —

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய திட்டங்கள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல், கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ.ரி. ஜெய சீலன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 'விழி' வெளிவந்துள்ளது

இராமநாதபுரம் —

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் ஜூன்மாதத்துக்கான மருத்துவ இதழான 'விழி' கடந்த 3ஆம் திகதி வெளிவந்துள்ளது.

இதில் ஆசிரியர் குறிப்புடன், பாலூட்ட அன்னை மறுப்பது ஏன், பற்சுகாதாரம், முதலுதவியை அறிந்து கொள்வோம் கண் நலம் பேணுவோம், எனது குழந்தை பிறப்பிலிருந்து ஒருவயது வரை ஆகியவற்றைத் தாங்கி வெளிவந்துள்ளது. (இ)


# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி பட்டறை நிகழ்வு

மன்னார் —

மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறை மன்னார் கல்வி வலய கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் குறூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சியில் மன்னார் மாவட்டக் கல்விக்கழக இணைப்பாளர் இராசையா உட்பட 300 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர்.



போரால் பாதிக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் இழந்த மக்களுக்கு - லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையினரால், வவுனியா - பாலமோட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ சுகாதார சேவையைச் சேர்ந்த வைத்தியர் விக்னேஸ்வரன் ஏற்றுவதையும், பாடசாலை மாணவி ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூன் -14

1775: பிலடெல்பியாவில் கூடிய அமெரிக்க காங்கிரஸின் இரண்டாவது கூட்டத்தில் அமெரிக்க காங்கிரசுக்கென தனி இராணுவம் அமைக்கப்படுவதற்குரிய தீர்மானத்தை நிறைவேற்றப்பட்டது. இந்த இராணுவத்துக்குரிய தலைமைத் தளபதியாக ஜோர்ஜ் வொஷிங்டன் நியமிக்கப்பட்டார்.

1777: அமெரிக்காவின் தேசியக் கொடியாகவுள்ள நட்சத்திரங்களையும், கோடுகளையும் கொண்ட கொடி, அமெரிக்கக் காங்கிரஸினால் தேசியக் கொடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1807: ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் ஃப்ரைட்லாண்ட் என்னுமிடத்தில் நடந்தபோதில், ரஷ்யப் படைகளை முழுமையாக அழித்து நெப்போலியன் வெற்றிபெற்றார்.

1827: அமெரிக்காவில் தொழிலாளர்களினால் தமது வேலை நேரத்தைப் பத்து மணித்தியாலங்களாகக் குறைக்கும் வேலை நிர்ணயக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

1897: அமெரிக்காவில் முதன் முதல் கொடிநாள் கடைப்பிடிக்கப்படத் தொடங்கியது.

1900: இதே ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி அமெரிக்கக் காங்கிரஸ் நிறைவேற்றிய சட்டத்தின்படி ஹவாய் பிரதேசம் அமெரிக்க நிர்வாக வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டது.

● : சர்வதேச மோட்டர்கார் ஓட்டப் பந்தயம் நடந்தது. பாரிஸ் நகரிலிருந்து லியான் நகர் வரையான தூரத்துக்கு இடம்பெற்ற இந்தப் போட்டியில் அமெரிக்கா, பெல்ஜியம், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே கலந்து கொண்டன. மணிக்கு 62 கி.மீ வேகத்தில் காரைச் செலுத்திச் சென்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் இந்தப் போட்டியில் முதலாவதாக வந்தார்.

1907: 1903க்கு பின்னர் வந்து குடியேறிய சீனர்களைத் திருப்பி அனுப்ப தென்னாபிரிக்க அரசு முடிவெடுத்தது. இக்காலப் பகுதியில் வந்து குடியேறிய 50,000க்கும் மேற்பட்ட சீனர்களால் தமது நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதாக தென்னாபிரிக்க அரசு அறிவித்தது.

1913: ஆசிய நாட்டினது வருகையையும், அவர்களது நடமாட்டத்தையும் கட்டுப்படுத்தும் குடியேற்றச் சட்டத்தை தென்னாபிரிக்க அரசு நிறைவேற்றியது. இந்தச் சட்டத்தை எதிர்த்து மகாத்மா காந்தியின் தலைமையில் நாடெங்கும் போராட்டங்கள் ஆரம்பமாகின.

1917: ரஷ்யாவின் வழக்கறிஞர் பேரவையில் பெண்களும் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். பெண்களுக்கும் வாக்குரிமை கேட்டு, உண்ணாவிரதம் இருந்தவரும், பல்வேறு பொது இடங்களிலும் தன்னைச் சங்கிலியால் கட்டிக்கொண்டு நின்று பெண்ணுரிமைக்காக புதுவகையான போராட்டங்கள் நடத்தியவரும், பெண்கள் வாக்குரிமைக் கழகத்தை நிறுவியவருமான லண்டனைச் சேர்ந்த வீராங்கனை எம்மலின் பாங்க் ஹர்ஸ்ட் மரணமானார். இவரது போராட்டங்களின் விளைவாகவே 1918 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1934: ஜேர்மனிக்கும் இத்தாலிக்கும் இடையே உறவை வலுப்படுத்துவதற்காக ஹிட்லரும், முசோலினியும் வெனிங் நகரில் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

1939: நான்கு சீனத் தீவிரவாதிகளை ஜப்பானிடம் ஒப்படைக்க பிரிட்டன் மறுத்ததால், பிரிட்டனதும், பிரான்ஸினதும் வர்த்தகக் கேந்திர நிலையமான டியன்ஸ்டீனை ஜப்பான் முற்றுகையிட்டது.

1941: அமெரிக்காவிலுள்ள ஜேர்மனி, இத்தாலி நாடுகளது சொத்துக்களை முடக்கும்படி ஜனாதிபதி ரூஸ்வெல்ட் உத்தரவிட்டார்.

1946: தொலைக்காட்சியைக் கண்டுபிடித்த ஜோன் லோகி பெயர்ட் மரணமடைந்தார்.

1948: செக்கோஸ்லோவேகியா முழுமையாகக் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தின் கீழ் வந்தநாள். புதிய ஜனாதிபதியாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோட்வால்ட் பதவி ஏற்றார்.

1949: கம்யூனிஸ்ட்டுக்களின் கடுமையான எதிர்ப்புக்களிடையே வியட்நாம் நாடு உருவாகியது.

1967: வெள்ளிக்கிரகத்தை ஆராய்வதற்காக மரீனர் -5 என்ற விண்கலம் அமெரிக்காவால் அனுப்பப்பட்டது. இது வெள்ளிக் கிரகத்துக்கு 6400 கி.மீ அருகே சென்று, புற ஊதா ஒளிப்படமானி மூலம் பெற்ற தகவல்களைப் பூமிக்கு அனுப்பியது.

1975: ரஷ்யா வெனீரா -10 என்ற விண் ஓடத்தை வெள்ளிக் கிரகத்தை நோக்கிச் செலுத்தியது. வெள்ளிக் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கும் இந்த விண் ஓடம், வெள்ளிக் கிரகத்தில் இறங்கிய கோளிறங்கு கலம் அனுப்பும் தொலைக் காட்சிப் படங்களை ஏற்று, புவிக்கு அனுப்பும் ஒளிபரப்பு நிலையமாக இது செயற்பட்டது.

1982: ஆஜென்ரீனா படைகளது தளபதி மென்டஸெல் ஃபோக்லந்தின் ஸ்டான்லி துறைமுகத்தில் வைத்து, பிரிட்டிஸ் படைகளிடம் சரணடைந்தார். இதனால் 15000 ஆஜென்ரீனா படை வீரர்கள் பிரிட்டிஸ் படைகளிடம் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர்.

2003: தற்போது நடைமுறையிலுள்ள சமாதான ஒப்பந்த நடைமுறைக் காலத்தில், இலங்கைக் கடற்படையினரது யுத்தநிறுத்த மீறலாக சர்வதேச கடற்பரப்பில் வைத்து 11 போராளிகளுடனும் ஒரு நாட்டுப்பற்றாளருடனும் விடுதலைப் புலிகளது வணிகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்டது.

● அமெரிக்காவில் கொடி நாளாகும்.

● சுவிற்சர்லாந்தில் கொமன்வெல்த் தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்*
*குற்றமே கூறி விடும்!*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஒன்றுமில்லாத ஒன்றிற்கான பேரினவாத பெருங் கூச்சல்

பொதுக்கட்டமைப்பு குறித்த விடயத்தில் ஜனாதிபதி தனது முடிவை மாற்றிக்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியும், எச்சரித்தும் ஜே.வி.பியினர் விதித்த காலக்கெடு நாளைமறுதினம் முடிவடையவுள்ள அதேசமயம் - பொதுக கட்டமைப்புக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இன்று நடத்தவுள்ள சூழலில், ஜே.வி.பியினர் தொடர்பான தனது கருத்து நிலைப்பாட்டை ஜனாதிபதி வெளிப்படையாக அறிவித்துள்ளமையானது இருதரப்பினருக்கும் இடையான விசுவாசமற்ற, இதுநாள்வரையிலான உறவு நிலையை வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளதெனலாம்.

'விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் எனவும், அவர்களுடன் சேர்ந்து செயற்திட்டம் எதனையும் மேற்கொள்ளக் கூடாது எனவும், எனக்குக் கட்டளையிட ஜே.வி.பியினருக்கு எந்த அருகதையும் கிடையாது. அவர்கள் தமது ஆயுதக் கலாசாரத்தைக் கைவிட்டுவிட்டுத்தான் ஜனநாயக அரசியலுக்கு வந்திருக்கிறோம் என இதுவரை எந்தக கட்டத்திலும் கூறியது கிடையாது' என ஜனாதிபதி நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ள விடயம் ஜே.வி.பியினர் குறித்த அவரது மனப்பதிவை வெளிப்படுத்தியுள்ளது.

அவர்கள் கொலைகளையும் - ஏனைய தண்டிக்கப்பட வேண்டிய பல குற்றங்களையும் செய்தவர்கள். பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுவந்த அவர்கள் இன்று எனது அரசில் பிரதான பங்காளிகளாக உள்ளனர் என அவர் ஜே.வ.பியினரின் சுயத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன் -அவாகளின் பேச்சைத் தான் கேட்கப்போவதில்லை என்ற தொனயைக் கொண்டதாகவும் அமைந்துள்ளபோதிலும் இன்னமும் அவர்களை அரசுக்குள் ஒட்டிக்கொள்ள இடமளித்து வருவதானது, அவர்களை அரசிலிருந்து அரசின் நிலைப்பாட்டுக்கு எதிராகச் செயற்பட்டுவருவதற்காக தூக்கி எறயும் துணிச்சல் ஜனாதிபதிக்கு இன்னமும் வரவில்லை என்றே கூறவேண்டும்.

இது ஜனாதிபதியின் பலவீனமான நிலையையே அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது. எதுவாக இருந்தாலும் இரு தரப்பினருமே அவரவர் நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்குவதென்பது கௌரவக் குறைச்சலான விடயம் என்பது வெளிப்படையான செய்தியாகும்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்துப் பேசிய ஜனாதிபதி, எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் பொதுக கட்டமைப்பைத்தான் உருவாக்கியே தீருவேன் என உறுத மொழி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது உண்மையானால் ஜே.வி.பியினர் விடுத்த காலக்கெடுவுக்கு முன்னர் ஜனாதிபதி அவர்களுக்கு தனது நிலைபபாட்டைத் தெளிவாகவும், பகிரங்கமாகவும் கூறிவிட ஏன் தயங்குகிறார்? ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறின் ஆட்சி கலைந்துவிடும் என்ற அச்சம் அவருக்கு இல்லையானால் பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் அரசிலிருந்து வெளியேறலாம் என்று கூறலாந்தானே...!

சரி அது இருக்கட்டும், பொதுக்கட்டமைப்பு குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின்போது உறுதியாகத் தெரிவித்ததையே அவரது பகிரங்க அறிவிப்பாக எடுத்துக் கொண்டு அரசைவிட்டு வெளியேறிவிடுவதுதானே...!


வெளயேறிய பின்னர் ஆர்ப்பாட்டமோ, பேரணியோ நடத்துவதுதான் சரியானது. அரசிலிருந்து விலகாமல் அமைச்சுப் பதவிகளைக் கடைசிக்கணம்வரை இறுகப்பற்றிக்கொண்டு வசதிவாய்ப்புகளை அனுபவித்தபடியே பொதுக் கட்டமைப்பை எதிர்த்து மக்களிடையே இனவெறியை உண்டு பண்ணும நோக்கில் பேரினவாத ஆக்ரோஷத்துடன் அறிக்கை விடுவதுதான் கோமாளித்தனமாகவுள்ளது.

இது ஒருபுறமிருக்க ஏற்கனவே பொதுக் கட்டமைப்புக்கு எதிரான நிலையை எடுத்து ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல் அறிவிப்பொன்றை விடுத்த மல்வத்த பீடாதிபதி உட்பட 4 மகாநாயக்கர்களின் கருத்து நிலைப்பாட்டுக்கு எதிராக மற்றொரு பௌத்த மதத் தலைவரான அஸ்கிரிய பீடாதிபதி தனது கருத்தை வெளியிட்டுள்ளார். பொதுக் கட்டமைப்பால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கோ, பாதுகாப்புக்கோ அச்சுறுத்தல் எதுவும் இல்லையென அவர் தனது கருத்தை வெளியிட்டுள்ளமையானது மகாநாயக்கர்களிடையேயான முரண்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாது ஹெல உறுமயவின் பின்னணி ஆதரவுடன் அதன் நாடாளுமன்ற உறுப்பினரான வண ஓமல்பே சோபித தேரர் மேற்கொண்ட சர்கும்வரை உண்ணாவிரதம் இடைநிறுத்தப்பட்டு பிசுபிசுத்துப்போனது. அந்தப் போராட்டம் ஆரம்பத்தில் பௌத்த சிங்களவர்களிடையே ஏற்படுத்திய உணர்வெழுச்சி நிலை அடங்கிப்போய்விட்டது.

ஹெல உறுமய பிக்குகளின் மூன்றாந்தர அரசியல்வாதகளுக்குரிய குணாம்சம் வெளிப்படையான ஒன்றாகிவிட்டது. இந்நிலையில் தென்பகுதியில் பொதுக் கட்டமைப்புக் குறித்த கருத்தியல் மோதல்களும், போராட்டங்களும அறிக்கை மற்றும் எச்சரிக்கை விடுத்தல் நிகழ்வுகள் யாவும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்மக்களுக்கு வெறும் பரபரபபான - ஆனால், அர்த்தமற்ற செய்திகளாகவே உள்ளன என்றால், அதற்குக் காரணம் இவ்வளவு பேரிரைச்சலை உண்டுபண்ணிவரும் பொதுக் கட்டமைப்பு என்பதை ஒன்றுமில்லாத ஒன்று என அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டிருப்பதே ஆகும்.

# நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# திசையை மாற்றியிருக்கும் சந்திரிகாவுக்கு வெற்றியா?

சுதந்திர இலங்கையின் வரலாற்றிலேயே இப்பொழுதுதான் நாட்டை வழிநடத்துவதற்கு - வழிநடத்தக்கூடிய ஒரு தலைவர் உருவாகிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது என்று சொல்லிக்கொண்டே வந்தார் பரமசிவம்.

யாரைச் சொல்லுகிறீர்? சந்திரிகா அம்மையாரைத் தானே. நீர்சொல்லுவது சரியாகத் தானிருக்குமென நினைக்கிறேன். இதேபிடியை அவர் விட்டுக்கொடுக்காமல் பிடித்தாரென்றால் மற்றவர்களும் ஆதரிக்க முன்வருவார்களென்பது நிச்சயம் என்றேன்.

மதகுருமார்களை முன்னே தள்ளித் தங்கள் அரசியலை வெற்றிகரமாக நடத்துவதற்கு திட்டமிட்ட ஜே.வி.பியின் மிரட்டலுக்குப் பணியமறுத்ததன் மூலம சந்திரிகா அம்மையார்இப்பொழுததான் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல, தன்னிடம் நாட்டுக்குத் தலைமை தாங்கும அரசியல் ஞானமும் கொஞ்சமிருக்கிறதென்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். பொதுக்கட்டமைப்பை நிறைவேற்றியே தீருவேன் என்பதில் அவர் உறுதியாக நிற்பாரா? நிற்கமுடியுமா? நிற்கவிடுவார்களா? என்ற கேள்விகள் பல எழுந்தன. மடாதிபதிகளும் மற்றைய பிக்குகளும், ஜே.வி.பியும் ஒன்று சேர்ந்து மிரட்டியபோது சந்திரிகா இந்த ராஜரிஷிகளின் கும்பலுக்கு ஈடுகொடுக்கமுடியுமா என்ற கேள்வி எழுந்ததும் உண்மை. கொஞ்சம் விட்டுக் கொடுக்கமுன்வந்தபோதிலும், முற்றிலும் அடிபணிய அம்மையார் மறுத்ததைப் பாராட்ட வேண்டும் என்று பரமசிவம் சொன்னார்.

அம்மையார் துணிந்து நின்றதால் மதில்மேல் பூனையாக நின்று எந்தப் பக்கம் சறுக்கினால் நல்லதென்று யோசித்த ஐக்கிய தேசியக் கட்சி இப்பொழுது பொதுக் கட்டமைப்பை ஆதரிக்கத் தயாராகிவிட்டது என்றே சொன்னேன்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் சந்திரிகா அம்மையாரின் ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆதரிக்கவேண்டுமென்று முன்னாள் கொழும்பு நகர மேயரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால உறுப்பினருமான கே.கணேசலிங்கம் கூறியிருக்கிறார். இந்தச் செய்தியை அரச ஊடகமான டெய்லி நியூஸ் பத்திரிகை தனது முதல் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது. இதுமட்டுமல்ல மதத்தலைவர் ஆட்சியிலுள்ளவர்களை ஆட்டிப்படைக்க முனைவதுடன் நாட்டின் அரசியலையே தங்கள் அங்கிக்குள்ளும் திருவோட்டுக்குள்ளும் (அப்படி இருக்கிறதா?) அடக்கிக் கொள்ள எத்தனிப்பதை மக்கள் விரும்பமாட்டார்கள்.

இதை அவர்கள் வெளிப்படையாக எதிர்க்கமுடியாமலிருந்தனர். ஜே.வி.பியும் அவர்களது தேசப்பற்று இயக்கமும் மதகுருமாருக்குக் குடைபிடித்துக் காப்பாற்றினர். அம்மையார் துணிந்து அடிபணிய மறுத்ததால் இனி மற்றவர்களும் வெளிவெளியாகத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க முன்வருவர் என்று பரமசிவம் சொன்னார்.

கண்டி அஸ்கிரிய பீடாதிபதி வண.உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரோ முதலிலேயே பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதாகச் சொல்லவில்லை. மற்றவர்களின் வற்புறுத்தலின் பேரில் மற்ற மடாதிபதிகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்தார். பொதுக்கட்டமைப்பினால் நாட்டுக்கோ, நாட்டின் பாதுகாப்புக்கோ எவ்வித பாதிப்பம் ஏற்படமாட்டாதென்று அஸ்கிரிய மடாதிபதி இப்பொழுது தெளிவாகத் தெரிவித்துவிட்டார். ஜே.வி.பியின் சாயம் விரைவில் வெளுத்துவிடும். சந்திரிகா அம்மையார் சாத்திரம் பார்த்தாரோ இல்லையோ அவர் இதேபிடியில் நீடித்தால் வெற்றி அவர் பக்கமே! என்றேன்.

இனவெறியைக் கக்கும் கொழும்பு ஆங்கிலத் தினசரி தி ஐலன்ட் பத்திரிகைகூட நல்லதொரு கட்டுரையை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கிறது கால மாற்றந்தான்.

மலேஷியாவின் முன்னாள் பிரதமர் மகதீர் சமீபத்தில் இலங்கை வந்தபோது தெரிவித்த கருத்தை எடுத்துக் காட்டி மலேஷியாவும் சிங்கப்பூரும் ஏன்? எப்படிப் பிரிந்து வாழநேரிட்டதென்பதையும், அவற்றின் ஒற்றுமையையும், வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது இந்தக் கட்டுரை. மலாய் விரோத சீன ஆதரவுக் கம்யூனிஸ்ட்டுகள் என்று, அச்சமயம் அதிகாரத்திலிருந்திராத மகதீர், சிங்கப்பூர் தலைவர்கள் பற்றிச் சொல்லியிருந்தார். இதைக் கேட்டதும், நாங்கள் பொரியும் கம்யூனிஸ்ட் சட்டிக்குள்ளிருந்து மலேசிய எரியும் அடுப்புக்குள் விழுந்திருக்கிறோம் என்று சிங்கப்பூர் தலைவர்கள் சொல்லி மலேசியாவிலிருந்து பிரிந்தார்கள் என்று கூறுகிறது. இரண்டு நாடுகளும் அனுபவத்திலிருந்து பாடம் படித்தன என்று கட்டுரையாளர் ஆர்.எம்.பி.சேனநாயக்க எழுதியிருக்கிறார்.

பண்டாரநாயக்க சிங்கள பௌத்த தேசியத்தை முன்னெடுத்து இலங்கையர் என்ற அடையாளத்தைப் பின் தள்ளினார். பின்னர் இதற்காக வருந்தி தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க நினைத்தார். ஆனால், அவர் மூட்டிய வகுப்பு வாத நெருப்பை அணைப்பது சுலபமாகவிருக்கவில்லை என்றும் இந்தக் கட்டுரை கூறுகிறது.

• கடற் கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து குறிப்பிட்ட ஒரு காலத்துக்குப் புனரமைப்புச் செய்ய ஜனாதிபதி சந்திரிகா முயற்சி செய்கிறார். இதற்கு விடுதலைப்புலிகள் பிசாசுகள் என்றும், அவர்களை அங்கீகரிக்கக்கூடாது என்றும், பிக்குகள் கூறுகின்றனர். ஆனால் போர்நிறுத்த உடன்படிக்கை அவர்களுடன் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. சமஷ்டிக் கட்சியுடன் செய்துகொண்ட எத்தனை ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. நாங்கள் இங்கிருந்து எங்கே போகிறோம்? பொதுக்கட்டமைப்பை இல்லாமல் செய்துவிட்டு, போர்நிறுத்தம் நீடிக்கும் என்று நாங்கள் நினைக்கலாமா? விடுதலைப்புலிகள் இரண்டாயிரம் தடவைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர். இன்னும் எத்தனையாயிரம் தடவைகள் மீறினாலும் நாம் பார்த்துக்கொண்டிருப்போம். தன்மானமுள்ள ஓர் அரசு அவசியமான காலக்கெடு கொடுத்து, போர்நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச்செய்யவேண்டும். இதைத் தானே தனது ஆத்திரமூட்டும் செயல்களால் ஜே.வி.பி செய்யும்படி தூண்டுகிறது.

நியாயப்படி போர்நிறுத்த ஒப்பந்தம் விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கின்றதென்பதால் போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளும்படி ஜே.வி.பி பகிரங்கமாகவே கோரியிருக்கவேண்டும். இந்தக் கட்சிகள் எல்லாம் போரைப்பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்குப் பயம். ஏனெனில் மக்கள் போரை விரும்பவில்லை. இப்படி அந்தக் கட்டுரை கூறுகிறது என்று சொன்னபடி சிவம் காலம்மாறுகிறது, சந்திரிகா மதபீடத்துக்கு எதிர்பாராத திசையைக் காண்பித்திருக்கிறார். நல்ல மாற்றங்களை இது கொண்டுவரும் என்பதற்கு இந்தக் கட்டுரை ஒரு சான்று என்று கூறியபடி பரமசிவம் நடந்தார்.

# வாசகர் நோக்கு

## புரட்டுக்களை அம்பலப்படுத்தவும்

கொழும்பில் காலை வேளையில் போய் இறங்கிய யாழ்.குருநகரைச் சேர்ந்த அப்பாவி இளைஞர் இருவர் அநியாயமாக இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

கொழும்பின் இரண்டு ஆங்கிலத் தினசரிகள் இவர்கள் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களென்று பொலிஸ் வட்டாரங்கள் சொன்னதாகச் செய்திகள் வெளியிட்டன. இதேபோல் வெள்ளவத்தை நெல்சன் பிளேசில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞனையும் இப்படித்தான் அந்தப் பத்திரிகைகள் குறிப்பிட்டுச் செய்தி வெளியிட்டன.

இவர்களுக்கு எப்படி இந்த ஆதாரம் கிடைத்தது. இந்த அபாண்டச் செய்திகள் பற்றி நாடாளுமன்றத்தில் நமது எம்.பிக்கள் கிளம்பி கொழும்பு ஊடகங்களின் புரட்டுக்களை அம்பலப்படுத்த வேண்டாமா?

**சண்டிலிப்பாய்.** சோ.சண்முகம்.

- தா.பாலகணேசன் -

# மண்ணின் மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்திய மூடுண்ட அரங்கில் நிகழ்ந்த வீதி நாடகங்கள்

நேற்றைய தொடர்ச்சி.......

வைக்கல் அடையப்பட்ட ஒரு சைக்கிள் போதும். இலங்கை அரசின் பொருளாதாரத் தடை எவ்வளவு மோசமாக இருந்தது என்பதை உணர்வதற்கு இவ்வாறே அவர்கள் காலத்துக்குக் காலம் நிகழ்த்திய தெருவெளி அரங்குகளைப் பார்க்கும்



ஒருவருக்கு, அந்தக் காலப்பகுதியில் முனைபுற்றிருந்த சமூக அரசியல் போராட்டப் பிரச்சினைகள் யாவும் துலக்கமாகும்.

இந்தக் காலகட்டத்தில் அங்கு மக்களுடைய உளவியல் எப்படி இருந்திருக்கும். அவர்களின் வலி, நோ, துயர் இவற்றை உணர்ந்து மிகக் கொடிதான உளவியல் சிக்கலில் இருந்து காப்பாற்ற இவர்கள் தம்மைக் கோமாளிகளாகவும் மாற்றி, வேசமிட்டுக் கொண்டு, சிரிப்பூமூட்டினார்கள். மக்களை, சிறுவர்களை உளவியல் ரீதியான விடுதலை செய்வதற்காக இவர்கள் தெருவெளி அரங்குகளில் ஆடியவர்கள்.

நாடகப் பண்புகள் குறித்த ஆய்வுகளுக்கப்பால் இவர்கள் ஒரு உயரிய நாடகத்துக்குரிய கருப்பொருளாக உயர்ந்து நிற்கின்றமையை எந்தவொரு நாடகவியலாளனாலும் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கமுடியாது. எமது தாய் மண்ணுக்கு நிகழ்ந்த அனர்த்தங்களை சமூக, அரசியல், ஆய்வுக் கண்ணோட்டங்களில் பார்க்கும் ஒருவரால், இதனைப் புரிந்து கொள்ள முடியும். மண்ணில் ஆணி வேராக நின்றெழும்பிய தெருவெளிக் கூத்தாடிகள் விடுதலை அரங்கைத் திறக்கிறார்கள். இந்த விடுதலை அரங்கச் செயற்பாட்டின் கனதி பற்றி ஒரு சில வார்த்தைகளில் சொல்வதானால் ஊடகங்களின் குரல்வளை நெரிக்கப்பட்ட நிலை யில், அச்சடிக்கப்பத்திரிகைத்தாள்கள் அற்ற நிலையில், வானொலியை இயக்க மின்சாரமற்ற நிலையில், அரங்குகளில் மக்கள் கூடியிருந்து விழாக்காண முடியாத நிலையில் எல்லாம் அறுந்து போன அவலம் தொங்கு நிலையிலேயே இவர்கள் ஊடகமாய் மாறினார்கள். இவர்கள் பத்திரிகைகளாய் மாறினார்கள்.

இவர்கள் அரசியல் ஆய்வாளர்களாக மாறினார்கள். இவர்கள் மருத்துவர்களாக மாறினார்கள். இவர்கள் சூழலைப்பற்றி, மர நடுகையைப் பற்றி, தண்ணீர் பற்றி, கடல் பற்றி, காடு பற்றி, எல்லாம் பேசினார்கள், பாடினார்கள், ஆடினார்கள் அத்தகைய தெருவெளி அரங்கச் செயற்பாட்டாளர்களின் இரு நாடக முயற்சிகளை நாம் பிரான்சில் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

பாலா மாஸ்ரரின் 'சூரிய தேவியின் சோகங்கள்' எனும் நாடகம் முதலில் அரங்கேறியது.

யார் இந்தச் சூரிய தேவி, அவளுக்கு என்ன நடந்தது, அவளேன் சோகமானவளாக இருக்கின்றாள் எனும் கேள்விகள் பார்வையாளர்களின் மன அரங்கில் எழுகின்றன. அண்மைக்கால நாடகங்களில் சில போரின் மீதான வெறுப்பையும், வேறு சில நாடகங்கள் சமாதானத்தின் அவசியத்தையும் பேசுகின்றன. அதை விடுத்து மிதிவெடிகள் தொடர்பான பிரச்சினைகளையும் காணாமல் போனோர் பற்றிய பிரச்சினைகளையும் பேசுகின்றன.

ஆனால், இந்த நாடகம் சமாதானத்தின் முகங்களை வெளிக் காட்டுவதாக அமைந்திருந்தது. அந்த வகையில் சமாதானம் குறித்ததான கருப்பொளைத் தாங்கியதான இந்த நாடகம் - பல்வேறான வாதப் பிரதிவாதங்களை எம்முள் எழுப்புகிறது. சமாதானமென்றால் என்ன? சமாதானத்தை யார் உண்மையில் விரும்புகிறார்கள்.

சமாதானத்தை யாரால் இந்த மனித குலத்துக்கு பரிசளிக்க முடியும், சமாதான தேவதையினுடைய கதை என்ன, அவள் எங்கு பிறந்தாள், அவள் ஏன் இலங்கைத் தீவுக்கு வருகை தந்தாள், இலங்கைத் தீவில் அவள் அடைந்த துயரம் என்ன, தீவில் சமாதான தேவதை அடைந்த அவமானங்கள் எத்தனை, அவள் எந்த நீதிமன்றில் ஏறி அவளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை முறையிட முடியும். அவள் ஏன் சிறைப்பட்டுப் போய் இருக்கிறாள், அப்போ அவளே சிறையிலிருந்துகொண்டு கண்ணீரும், கம்பலையுமாக அவலப்பட்டுக் கொண்டு எப்படி ஒரு சமாதானத்தை அவளால் மற்றவர்களுக்கு வழங்க முடியும்.

உலக சமூகத்தை, சமாதான முன்னெடுப்பாளர்களை சமாதான மையங்களை நோக்கி, சமாதானத்துக்கான பணி புரியும் இடங்களை சுட்டிக்காட்டுவதோடு, ஒடுக்குமுறைக்குள்ளாகிறவனிடம் சமாதானத்தை ஏற்படுத்துகிற முயற்சியிலுள்ள குறைபாடு பற்றியும் பேசி, இந்த நாடகத்தின் காட்சிகள் விரிகின்றன.

இந்த நாடக வடிவம் எமக்கு மிகவும் பரிட்சயமானது. சமாதானத்தை ஒரு சினிமாத்தனமாக நிகழ்த்தும் சிங்கள ஆட்சியாளர்களின் போலி முகத்தை போட்டுடைக்கவும், வெளிப்படுத்தவும் நெறியாளர் இந்த வடிவத்தைக் கையாண்டிருக்கலாம்.

வாதப் பிரதிவாதங்களின் போது பார்வையாளர்களும் சூடேறுகிறார்கள். சமாதானத்துக்கான உண்மையான முகங்களை, உண்மையாக ஒலிக்கும் குரல்களைத் தேடுகிறார்கள். சமாதானம் மலரக்கூடிய வகையில் உலக சமூகத்தினுடைய அகத்திலும், புறத்திலும் மாற்றம் நிகழவேண்டும். இல்லையேல் இலங்கைத் தீவில் மட்டுமல்ல உலகத்திலும் சமாதானத்தின் மூச்சு நின்றுவிடும் என்ற செய்தியை அது எமக்குள் வலுவாகத் தோற்றவைத்தது.

### கரைதேடும் ஓடங்கள்

புதுவை அன்பனின் 'கரை தேடும் ஓடங்கள்' பல குறு நாடகங்களின் தொகுப்பாகக் காணலாம். இவரது நாடகப்பாங்கில் தமிழ் நாட்டுப்புறக் கூத்து மரபின் வேர்கள் எறிந்திருப்பதைப் பார்க்கலாம். அதே போன்று, இசை நாடக மரபு ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின்னால் மாற்றமடைந்து சென்ற நாடகப் பண்புகளின் உள்வாங்கலும், குறியீட்டு நாடகப் பாங்கில் அமைந்த தன்மைகளுமாக இவரது நாடகம் செழித்திருக்கிறது. எமது மண்ணின் கலைக் கூறுகளை நேர்த்தியாகவும், சிறப்பாகவும் தேர்ந்து அவற்றைப் பேசுபொருளுக்கேற்ப இணைப்பது படைப்பாளியின் நுண்ணிய பக்கங்களாகின்றன.



கரை தேடும் ஓடங்களில் நாம் பின்வரும் தலையங்கங்களில் பல குறுநாடகங்களைக் காணலாம். இன ஒற்றுமை, தாளம் போடுதல், ஆட்சியாளர்களின் கதிரையும் கதிரைச்சண்டையும், நல்லகாலம் வருகுது, அரக்கன் பசி பல்லக்கு வெறி என்பனவாகும்.

இவை அணைத்தும் இன்றைய நவீன நாடகங்களுக்கான தலைப்புகளாகத் தோன்றலாம். நவீன நாடகங்களுக்குரிய பண்புகளும் செறிந்திருந்தன. நடிகனிடம் அதிக வேலையைக் கோரும் இந்த நாடகங்களில் அணைத்து அம்சங்களையும் துல்லியமாக, சிறப்பாகக் கொண்டுவர முயன்றிருக்கிறார்கள். அவற்றை நெருங்கமுடியாமல் போனவைக்கு புறக்காரணிகளும் ஏதுவாக அமைந்து விடுகின்றன. ஆத்மார்த்தமாக நடிகர்கள் தமது நடிப்பால் மண்ணின் மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தினார்கள்.

பல்வேறு பாத்திரங்களாக மாறி மாறி நடிக்க வேண்டிய நிலையிலும், அவர்கள் அவர்களேற்ற பாத்திரங்கள் உடைந்து சிதறாமல் காப்பாற்றினார்கள். வீதி நாடகங்களாகத் தெரு வெளிகளில் சோபித்த இந்த நாடகங்கள் அரங்க வெளியிலும் மக்களோடு இரத்தமும் தசையுமாக உறவாடியது. இந்தக் கலைஞர்கள் எம்மத்தியில் அரங்காடிச் சென்ற பின்னரும், பனி மண்டல வெளிகளில் அவர்கள் எந்த மக்களுடைய குரலை, பாடலை, ஆடலை, சோகத்தை, கனவை, வாழ்வை எடுத்து வந்தார்களோ அவை கேட்கத் தொடங்குகின்றன. காட்சிகளாக மன அரங்கில் விரியத் தொடங்குகின்றன. அரங்கு மூடுண்டு கிடக்கிறது. நாடகம் தொடங்குகின்றது.

- கலையியல் -


- காவலூர்.விஜேந்திரன் -

# தூரிகை கொண்டு துயர நிகழ்வை வெளிக்கொண்டுவரும் இளம் ஓவியர்கள்

இயற்கையின் சீற்றத்தால் அழிவுகளையும், அவலங்களையும் சந்தித்த கடற்கரையோரப் பகுதிகளைத் தமது தூரிகையால் படம்பிடித்து காட்சிப் படுத்தி வருகின்றனர் திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்ட மாணவர்கள். கடல்வரைந்த சிதைவுகளையும், கடலால் காவுகொள்ளப்பட்ட பகுதிகளையும், மிகத் திறமையாக அழிவுகளுக்குள்ளும் அழகுள்ளதென்பதை மிகத் திறமையாக வெளிக்கொணர்ந்துள்ளனர் இளம் ஓவியர்கள். காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓவியமும் ஏதோ ஒரு வகையில் அழிவுகளை ஆழ ஊடுருவுவதனை அவதானிக்க முடிகிறது.

தூரிகைகள் கொண்டு துயர நிகழ்வை சித்தரிக்க முற்பட்டதும், அவற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் காட்சிப்படுத்தி வருகின்றமை பெருமைக்குரிய விடயம். அழிவுகளை ஆவணமாக்க வேண்டும் என்ற மனப்பதிவுகளை ஓவியங்களாக வெளிக்கொனர்ந்த ஒவ்வொரு இளம் ஓவியர்களும் பாராட்டிற்குரியவர்கள். வரலாற்றுத் தேவையை மிக நேர்த்தியாக அழகுணர்வுடன் தூரிகையால் பதிவு செய்தமையானது, காலத்தின் தேவையென்பது நினைவு கொள்ளப்பட வேண்டியது.

திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்ட மாணவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் வவுனியா, கொழும்பு, மாத்தறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தமது காட்சிப் பதிவுகளைப் பகிர்ந்து கொண்டனர். பலரது பாராட்டுக்களைப் பெற்ற நிறைவில், கடந்த மே மாதம் யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்ற கலா முற்றத்தில் ஓவியங்களைக் காட்சிப்படுத்தினர்.



பார்வையாளர்களின் மன நிறைவையும் தமக்கு தம் பகுதியில் கிடைத்த வரவேற்பாலும் ஜூன் மாதம் மணற்காடு, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் கடல் வரைந்த ஓவியங்களை மீண்டும் தாம் வரைந்து காட்சிப்படுத்தவுள்ளனர். எண்ணெய் வர்ணம் கொண்டு தீட்டப்பட்டுள்ள இருபது ஓவியங்களை பன்னிரண்டு இளம் ஓவியர்கள் வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை சார்ந்தவர்களோ, இயங்கிக் கொண்டிருக்கும் மூத்த ஓவியர்களோ சிந்திக்காத ஒரு செயலை மிகத் திறமையாக, அதே நேரம் விரைவாக மேற்கொண்டுள்ளமை போற்றுதற்குரியது.

சுய விளம்பரத்துக்காகவோ, அமைப்பு ரீதியான கௌரவத்துக்காகவோ இவர்களால் இந்தக் கண்காட்சி நடத்தப்படவில்லை என்பது அவர்களுடன் உரையாடியதன் மூலம் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சிறந்த ஓவியர் அழகையும், கலை வலிமையையும், உள்ளடக்கத்தையும் ஒன்றிணைக்கிறது. ஓவியம் ஒரு கட்புலக் கலையாக இருந்தாலும், ஏனைய புலன்களின் அதிர்வுகளையும், சுவைகளையும் அது கட்புலன் வீச்சிற்குள் கொண்டு வந்து விடுகின்றது. இரு தளங்களில் ஓவியர்கள் முப்பரிமானங்களைக் காட்டுதல், காட்சியின் வழியாக ஒரு பொருளின் பாரத்தை உணர்த்துதல், வடிவமைப்பின் மூலமாகக் கருப்பொருளின் நறுமணத்தைப் புலப்படுத்துதல்

தொடரும்...

## இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட

# காஷ்மீரில் குண்டுவெடித்து எண்மர் பலி; 50 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்!



காஷ்மீர் —

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சுமார் எண்மர் கொல்லப்பட்டதுடன் ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பு காஷ்மீரிலுள்ள புல்வாமா நகரில் அரசாங்கத்தின் உயர் நிலைப் பாடசாலைக்கருகில் நடைபெற்றது. இந்தத் தாக்குதலில் மாணவர்களும் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டு வெடிப்பில், தாக்குதலை நடத்திய கிளர்ச்சிவாத சந்தேக நபரும் கொல்லப்பட்டதாக பொலிஸ் அதிகாரி இம்தியாஸ் அகமட் தெரிவித்தார்.

தாக்குதலை மேற்கொண்டவர் வாகனத்தில் கட்டடப் பொருட்களுடன் குண்டையும் கொண்டுவந்து வெடிக்கச் செய்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் பின்னர் ஆத்திரம் கொண்ட மக்கள் அரசாங்கத்திற்கெதிராக சுலோகங்களை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும், இவர்களைக் கலைக்க பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றைய இந்தத் தாக்குதலுக்கு முன் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷராப் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்தியாவுடனான காஷ்மீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்குமென தான் நம்புவதாகவும், இரண்டு நாடுகளும் தற்போது அரசியல் ரீதியான தீர்வில் முனைப்பாக ஈடுபட்டு வருவதாகவும், எனவே மிகக் குறுகிய காலத்தில் இந்தத் தீர்வு கிடைக்குமெனவும் தெரிவித்திருந்தார்.

# ஈராக்கில் சூட்டுக் காயங்களுடன் 20 சடலங்கள் பொலிஸாரால் மீட்பு

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் சூட்டுக்காயங்களுடன் 20 உடல்கள் நிலமட்டத்தில் புதைக் கப்பட்டு அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலங்கள் 15 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்டவர்களுடையதாக இருக்கலாமெனவும், இவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாமென வும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட உடல்கள் எதுவும் அடையாளம் காணமுடியாதவாறு சிதைந்திருந்ததாகவும் இவற்றை அடையாளம் காண்பதற்கு அந்த இடத்தில் ஒருவரும் இருக்கவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சம்பவ இடத்திற்குப் பொலிஸார் சென்றவேளை அங்கு எதுவும் தென்படவில்லை. பின்னர் புல்டோசர்கள் வரவழைக்கப்பட்டு நிலம் தோண்டப்பட்ட போது இந்த உடல்கள் மீட்கப்பட்டன. இந்த 20 பேரும் முதலில் சுட்டப்பட்டு பின்னர் புதைக்கப்பட்டிருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட 20 சடலங்களில் ஒன்று சுனி முஸ்லிமினுடையதென உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளதாக சுனி முஸ்லிம் மதகுரு ஒருவர் தெரிவித்தார்.

உலக நோக்கு

# அலன் ரொபேட்டின் சாதனைப் பயணம் தொடர்கின்றது!




பிரான்ஸ் —

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் அலன் ரொபேட். 42 வயதான இவர் கயிறு, ஏணி எதையும் பயன்படுத்தாமல் உயரமான கட்டடங்களின் சுவரைப் பிடித்து ஏறி சாதனை நிகழ்த்தி வருகிறார்.

தற்போது ஹொங்ஹொங்கில் உள்ள 62 மாடி செங்காக் கட்டடத்தின் மீது ஏறி சாதனை நிகழ்த்தியுள்ளார்.

சுவரைப் பிடித்தபடியே அவர் 283 மீற்றர் உயரமுள்ள அந்தக் கட்டடத்தின் மீது ஏறி சாதனை நிகழ்த்தினார். சிலந்தி மனிதன் (ஸ்பைடர் மான்) என்று அழைக்கப்படும் அலன் ரொபேட் ஏற்கனவே கோலாலம்பூரில் உள்ள பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரம், நியூயோர்க்கிலுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடம், பாரிஸ் நகரிலுள்ள ஈபிள் கோபுரம் ஆகியவற்றின்மீதும் ஏறி சாதனை புரிந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வாகனத் தொடரணி மீது ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்!



ஆப்கானின் தென்பகுதியில் அமெரிக்க வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் தமது படையினர் நால்வர் காயமடைந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டதாக வெளிவந்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கத் தொடரணி கந்தகாரிலுள்ள மேற்குப் பகுதி பிரதான வீதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையே, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.காயமடைந்த நால்வரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ பெண் பேச்சாளர் லெப்ரினன்ட் இன்டிமூரி தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதலை தாமே நடத்தியதாக தலிபான் அறிவித்துள்ளது. இது குறித்து தலிபான் பேச்சாளர் முல்லா அப்துல் லத்தீப் ஹக்கீமி ஏ.எவ்.பி செய்தி நிறுவனத்திற்குத் தெரிவிக்கையில் –

எமது முஜாகுதீன் சகோதரர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டார். அமெரிக்கப் படையினரின் மூன்று வாகனங்கள் சென்றவேளை அதன் நடுப்பகுதியில் தனது காரைக் கொண்டு சென்று தாக்குதலை நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

## 101 மணி நேரம் ஓகன் வாசித்து கேரளாக்காரர் சாதனை!

கேரளாவைச் சேர்ந்த மிமிக்ரி கலைஞர் ஒருவர் தொடர்ந்து நூற்றியொரு மணிநேரம் ஓகன் வாசித்து இதற்கு முந்தைய அவரின் கின்னஸ் சாதனையான 60 மணி நேரத்தை மு[illegible]டித்தார். கேரள மாநிலம் திருச்சூ[illegible]ச் சேர்ந்தவர் நசீர் (43). இவர் 1999 செப்டெம்பரில் தொடர்ந்து 50 மணி நேரம் ஓகன் வாசித்தார்.

கொச்சியில் அவர் நடத்திய இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் மும்பையில் தொடர்ந்து 101 மணி நேரம் ஓகன் வாசித்து இதற்கு முன் அவர் நிகழ்த்திய சாதனையை முறியடித்து மீண்டும் உலக சாதனை நிகழ்த்தினார்.

ரஷ்யாவில் —

# தண்டவாளத்தில் குண்டுவெடித்து ரயில் பயணிகள் 12 பேர் காயம்!




ரஷ்யாவில் செச்ன்யா பகுதியில் கிளர்ச்சிவாதிகள் பிரிவினை கோரிப் போராடி வருகின்றனர். இந்த கிளர்ச்சிவாதிகளை ஒடுக்க ரஷ்ய ராணுவம் செச்ன்யாவுக்குப் பெருமளவில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் கிளர்ச்சிவாதிகளின் தலைவரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இதையடுத்து ஓய்ந்திருந்த கிளர்ச்சிவாதிகள் தங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

செச்ன்ய தலைநகர் குரோஸ்னியில் இருந்து மொஸ்கோ நோக்கிப் பயணிகள் ரயில் ஒன்று சென்று கொண்டிருந்தது. மொஸ்கோவுக்குத் தெற்கே 150 கிலோ மீற்றர் தூரத்தில் அந்த ரயில் வந்தபோது தண்டவாளத்தில் திடீரென்று குண்டுவெடித்தது.

குண்டுவெடித்த இடத்தில் 10 அடி நீளத்திற்கு பெரிய பள்ளம் ஏற்பட்டது. இதனால் அந்த ரயிலின் இரண்டு பெட்டிகள் தடம்புரண்டன. குண்டு வெடித்ததிலும் ரயில் பெட்டிகள் கவிழ்ந்ததிலும் ஒரு சிறுமி உட்பட 12 பேர் காயமடைந்தனர். இதில் சிலர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ரஷ்யா தனது தேசிய தினத்தைக் கொண்டாடியது. மொஸ்கோ உட்பட பல்வேறு நகரங்களில் கோலாகலமாக நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சிகளின்போது செச்ன்ய கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதற்காகப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அதையும் மீறி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீரப்பனின் இரு பிள்ளைகளையும் பாடசாலைகள் சேர்க்க தயக்கம்!

சந்தனக் கடத்தல் வீரப்பன் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி அதிரடிப்படையினரால் சுட்டு கொல்லப்பட்டார். வீரப்பனுக்கு வித்தியாராணி(வயது14), பிரபா (வயது 13) என்று இரண்டு மகள்கள் உள்ளனர்.

மூத்த மகள் வித்தியாராணி கோவையிலுள்ள புனித பவுல் பாடசாலையில் 8 ஆம் வகுப்பு படித்தார். 2 ஆவது மகள் பிரபா கடலூரிலுள்ள புனிதஜோசப் மேல் நிலைப் பாடசாலையில் 7ஆம் வகுப்பு படித்தார். வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் அந்தப் பாடசாலைகளில் தொடர்ந்து படிக்க இயலாமல் வெளியேறும் நிலையேற்பட்டது.

வீரப்பன் தனது மூத்தமகள் வித்தியாராணியை நிர்வாகச் சேவை அதிகாரியாக ஆக்கவேண் டும் என்று ஆசைப்பட்டார். அது போல 2 ஆவது மகள் பிரபாவை கணினிப் பொறியியலாளராக ஆக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். தந்தை விருப்பத்தை நிறை வேற்ற இருவரும் நன்கு படித்துவந்த னர்.

கடந்த இறுதித் தேர்வில் வித்தியாராணி, பிரபா இருவரும் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றுள்ளனர். அடுத்து அவர்கள் இருவரும் 9 ஆம் மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கு செல்ல வேண்டும். ஆனால் பாடசாலை அனுமதி கிடைக்காததால் அவர்கள் பரிதாப நிலையிலுள்ளனர்.

வீரப்பன் மகள் என்பதை அறிந்ததும் பாடசாலை நிர்வாகத்தினர் பயந்து போய்விடுகிறார்களாம். இது குறித்து வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி கண்ணீர் மல்கிக் கூறியதாவது;-




என் இரண்டு மகள்களையும் பாடசாலையில் சேர்ப்பதற்கு போராடி வருகிறேன். திருச்சி , சேலம், நாமக் கல் மாவட்டங்களில் பெரும்பாலான பாடசாலைகளை அணுகினேன். ஆனால், வீரப்பன் மகள்கள் என்று தெரிந்ததும் பயப்பிடுகிறார்கள்.

என் மகள்களைச் சேர்த்தால் பொலிஸார் தொந்தரவு செய்வார்களென்று நினைக்கிறார்கள். தயவுசெய்து இந்த இடத்தை விட்டுப் போய் விடுங்கள் என்கிறார்கள். யாருக்குமே மனிதாபிமானமில்லை.

என் மகள்கள் படிப்பிற்கு நிறைய அரசியல்வாதிகளை பார்த்துப் பேசி விட்டேன். எவ்லோரும் உதவி செய்வதாக உறுதியளித்தார்கள். ஆனால் வழக்கம் போல எந்த சிறு உதவியும் செய்யவில்லை.

என் கணவர் செய்த பாவத்துக்காக இந்த அப்பாவிப் பெண்கள் ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும்? உண்மையில் இந்த உலகை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எல்லோரும் எங்களை வெறுத்து ஒதுக்கிறார்கள்.

என் கணவர் உயிருடன் இருந்த போது பொலிஸார் கொடுத்த தொந்தரவு மற்றும் பல்வேறு காரணங்களால் நாங்கள் மூவரும் தனித்தனியே பிரிந்திருந்தோம். பாதுகாப்பில்லாததால் நான் என் மகள்களைப் பிரிந்திருந்தேன். பயந்தபடிதான் நான் இருந்தேன். இனியாவது இந்த உலகம் எங்களை நிம்மதியாக வாழவிடக் கூடாதா?

என் மகள்கள் சிறுவயதில் மகிழ்ச்சியை தொலைத்தார்கள். பெற்றோருடன் வாழும் சுகத்தைப் பறிகொடுத்தார்கள். அந்த மகிழ்ச்சியையும், சுகத்தையும் இனியாவது கொடுக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

என் மகள்களை இனியும் பிரிக்க நான் விரும்பவில்லை. அவர்கள் இருவரும் ஒரே பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டும். ஆனால் இருவரும் கன்னியர் மட பாடசாலைகளில் படித்ததால் தமிழில் எழுதவோ வாசிக்கவோ தெரியாது:

இந்தியை இரண்டாவது விருப்பப் பாடமாக எடுத்துப் படித்திருந்தனர். இதுதான் பிரச்சினை. இதன் காரணமாக என் மகள்களை எளிதில் பள்ளியில் சேர்க்க இயலாத நிலை நிலவுகிறது.

என் மகள்களின் படிப்பிற்கு நல்ல மனம் படைத்த புண்ணியவான்கள் உதவவேண்டும் அதற்காக நான் காத்திருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# சிவராம் கொலையாளிகளின் வாகனம் கைப்பற்றப்பட்டது!

கொழும்பு

ஊடகவியலாளர் டி.சிவராமை படுகொலை செய்தவர்கள் பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் வாகனம் ஒன்றையும், செல்போனின் சிம் காட்டையும் கைப்பற்றியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிவராம் படுகொலை தொடர்பாக அண்மையில் கைதுசெய்யப்பட்ட புளொட் இயக்கத்தைச் சேர்ந்த பீற்றரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நடத்திய விசாரணையை அடுத்தே இவை கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட வாகனத்தில் தான் சிவராம் கடத்தி படுகொலை செய்யப்பட்டார் என்று கருதப்படுவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் படுகொலை வழக்கில் புளொட் இயக்கத்தை சேராத மேலும் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

புளொட் இயக் கத்தின் ஆர்.ஆர். என்றழைக்கப்படுகின்ற நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### சுனாமியால் பாதிக்கப்பட்ட

# 336 இலங்கையர்களுக்கு கனடாவில் வதிவிட உரிமை!

கொழும்பு

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவாகளில் 336 பேருக்கு கனடாவில் நிரந்தரமாக வசிப்பதற்கான அனுமதியைக் கனடா அரசாங்கம் நேற்று வழங்கியது.

உறவினர்கள் கனடாவில் வசிப்பதன் காரணமாகவே இவர்களுக்கு நிரந்தர அனுமதி வழங்கப்பட்டதாக கனடா அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து கொழும்பிலுள்ள கனடா தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் -

சுனாமி பேரனர்த்தத்தை கனடா அரசாங்கம் மனிதாபிமான அழிவாகப் பார்க்கின்றது. கனடாவில் உறவினர்கள் இருந்து சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், விண்ணபித்த தன் அடிப்படையில் அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து கனடாவின் குடிவரவுத் திணைக்களம் பரிசீலனை செய்த பின்னர் இவர்களுக்கான நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண வீட்டில்...

கடந்த சனிக்கிழமை இந்தப் பகுதியில் சைக்கிளில் சென்றவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிர் தப்பிய ஒருவருக்கு இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் தெரிவிக்கப்படுகிறது.

### பொதுக்கட்டமைப்புக் குறித்து

# ஆளும் கட்சி எம்பிக்களுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண ஆளுனர்களுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவிற்குமிடையில் நேற்று ஜனாதிபதி மாளிகையில் பொதுக் கட்டமைப்பிற்கு அனுமதி பெறுவது தொடர்பான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பெருமளவானோர், பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு தமது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை.

எனினும் இங்கு உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா, பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது தொடர்பாக எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் முடிவொன்றை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சுமார் ஒன்றே முக்கால் மணிநேரம் உரையாற்றினார். பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அத்துடன் இந்த விடயம் தொடர்பாக ஜே.வி.பியுடனான தொடர்புகள் சிக்கல் நிறைந்ததாக உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரையின் பின் மங்கள சமரவீர ஆற்றிய உரையில்- பொதுக் கட்டமைப்பிற்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனாலும் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் அரசாங்கம் கவிழுமென்றால் அது ஏற்படுத்தப்பட்டும் பயனில்லை. ஜனாதிபதி தலைவர் என்ற வகையில் இது தொடர்பாக முடிவை எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய வட மத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிரேம்லால்-ஜே.வி.பியுடன்இணைந்து அரசைக் கொண்டு நடத்துவது மிகவும் தேவையானது எனத் தெரிவித்தார். தென் மாகாண ஆளுனர் கிங்ஸ்லி ரி விக்கிரமசிங்க தனதுரையில் - பொதுக் கட்டமைப்பின் திட்டங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஆனால் இந்தக் கருத்தை ஜனாதிபதி தேவையற்ற ஒன்று எனத் தெரிவித்தார்.

## பேரினவாத...

கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது. கண்டன உரைகளை விரிவுரையாளர் சிதம்பரநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி பரமேஸ்வராச் சந்தியில் தீயிட்டு எரிக்கப்பட்டதுடன் - பேரினவாதக் கொள்கைகள் அடங்கிய சவப்பெட்டியும் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், ரவிராஜ் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

### கைக்குண்டுடன் கைதான

# ஈ.பி.டி.பி. உறுப்பினருக்கு விளக்கமறியல் உத்தரவு!

வவுனியா காமினி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினரை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டது.

கைது செய்யப்பட்டுள்ள பத்மஜீவன் என்னும் இளைஞன் வெடிபொருள் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிப்பதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்தார்.

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தின் முன்பாக நேற்று முன்தினம் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட பத்மஜிவன் ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர்) அணியிலிருந்தபோது வெடிபொருட்கள் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு ஒன்றரை வருடம் விளக்கமறியிலில் இருந்தவர் என்று தெரியவந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை கிளைமோர் தாக்குதல் நடந்த முகாமிலிருந்து 200 மீற்றர் தொலைவில் இவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டிஷ் அமைச்சர் கொழும்பு வருகிறார்

கொழும்பு

பிரிட்டிஷ் அபிவிருத்த அமைச்சர் கிறேக் தோமஸ் அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பு வரும் இவர், 16 ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார் என்றும் - இதன்போது அறுகம்குடா, நிந்தவூர், அம்பாறை, ஹிக்கவெவ, காலி ஆகிய இடங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் இவர் - சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னரான விடயங்கள் குறித்து பல உயர்மட்டச் சந்திப்புக்களை நிகழ்த்துவார்.

## கூட்டணி அரசாங்கத்தை...

இப்போது நாட்டில் தோன்றியிருக்கும் நிலைமைக்கேற்ப பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி சில முக்கிய முடிவுகளை எடுக்க இடமுள்ளது. ஒருவேளை பொதுக்கட்டமைப்புத் தொடர்பான யோசனையை அவர் கைவிட்டு, நாட்டில் ஆங்காங்கே மீண்டும் குண்டுகள் வெடிக்கத் தொடங்கி - மீண்டும் யுத்தமொன்று வெடிக்க ஆரம்பித்தால் ஜாதிக ஹெல உறுமய உட்பட பொதுக் கட்டமைப்பை எதிர்க்கும் ஏனைய கட்சிகளே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

இன்று பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட வேண்டாமெனக் கூக்குரலிடுபவர்களில் எத்தனை பேரின் பிள்ளைகள் யுத்தத்திற்குச் செல்வார்கள்? அவர்களின் பிள்ளைகள் எவரும் யுத்தத்துக்குச் செல்லவும் மாட்டார்கள் - அவர்களை அனுப்பவும் மாட்டார்கள்.

யுத்தத்துக்குச் செல்வது அப்பாவிப் பெற்றோரின் பிள்ளைகளே. அதேபோல் யுத்தத்தின் பாதிப்புக்களை வடக்கு - கிழக்கிலுள்ள கிராமத்தவர்களே அனுபவிக்கின்றனர். எனவே, சந்தர்ப்பவாதிகளால் மக்கள் ஏமாறக் கூடாது.

பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்தினால் நாட்டுக்கு 22 பில்லியன் அமெரிக்க டொலர் உதவி கிடைக்கும். பொதுக்கட்டமைப்பு இன்றேல் அது கிடையாது. அரசியல் நலன்களுக்காக மக்களைத் தூண்டிவிடுபவர்கள் இவைபற்றி புரிந்துகொள்ளல் அவசியம்.

அரசியல் இலாபங்களுக்காக பொய்யாகப் பட்டினி கிடக்காமல் பொதுக்கட்டமைப்பிற்கெதிராக உண்ணாவிரதம் இருப்பவர்கள் வடக்கிற்குச் சென்று யுத்தம் புரியவேண்டும்.

இன்று பொதுக்கட்மைப்புக்கு எதிராக கூக்குரலிடும் ஓமல்பே சோபித, அத்துரலிய ரத்னதேரர் ஆகியோர் நாட்டுக்காக ஏதேனும் தியாகம் செய்துள்ளனரா?

அச்சத்தால் நாட்டை விட்டு இங்கிலாந்துக்கு போய் ஒளிந்திருந்துவிட்டு தற்போது நாடு திரும்பியிருக்கும் ஒருவர் கூறியுள்ளார். ஜனாதிபதியுடன் பண்டாரநாயக்கர்கள் முடிந்து விட்டார்கள் என்று. நான் அந்த நபரின் பெயரைக் கூறப்போவதில்லை. அடுத்த பண்டாரநாயக்கா நான் இருக்கிறேன் என்பதை அவருக்குக் கூறிக்கொள்கிறேன்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் பொதுக்கட் டமைப்பு விவகாரத்தைக் கைவிடாவிட்டால் மக் கள் விடுதலை முன்னணி - அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதாக அறிவித்துள்ளது. நான் பாடுபட்டு அமைத்த கூட்டமைப்பு அரசாங்கத்தை கவிழ இடமளிக்க முடியாது.

அதனால் கூட்டணி அரசாங்கத்தை தொடர்ந்தும் கொண்டுசெல்ல வேண்டியுள்ளதால் பொதுக் கட்டமைப்பு யோசனையை கைவிட வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது என அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

## பொதுக்...

ஆர்ப்பாட்டத்தின்போது மாணவர்கள் மீதும் கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக உண்ணாவிரதமிருந்துவரும் பௌத்த பிக்குகள் மீதும் மிகக் கடுமையாக நடந்து கொண்ட பொலிஸார் -

இன்று ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்துக்கு எதிராகவும் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுக் கட்டமைப்புக்கு எதிரான போராட்டங்களில் இதுவரை ஜாதிக ஹெல உறுமய முன்னணியில் திகழ்ந்தமையால் - ஜே.வி.பியினர் இந்தக் கண்டனப் பேரணிமூலம் தமது பலத்தை நிரூபிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள்மூலம் தெரியவந்துள்ளது.

நேற்று கொழும்பில் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிவளைக்கத் திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தமுடியாமல் போனால் அவர்கள்மீது கால்களுக்குக்கீழே துப்பாக்கிப் பிரயோகம் நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்ததாகவும், எனினும் கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலுடன் அவர்கள் கலைந்து சென்றுவிட்டமையால் அதற்கான தேவை ஏற்பட்டிருக்கவில்லை என்றும் தெரியவந் துள்ளது.

## பொதுக் கட்டமைப்பை...

இதன்போது பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா - ரணில் விக்கிரம சிங்கவுடன் விரிவாக ஆராய்ந்ததாகவும் தெரியவருகிறது.

பொதுக்கட்டமைப்பு யோசனையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாகவும் ,அதன் நிர்வாகக் கட்டமைப்பு முறை தொடர்பாகவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விரிவாக விளக்கிக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா, இந்த யோசனையின் நகல் எதனையும் ரணில் விக்கிரமசிங்க விடம் கையளிக்கவில்லை.

ஜனாதிபதியின் இந்த விளக்கத்தையடுத்து இந்த யோசனைகளை இப்போது தாம் நன்கு புரிந்துகொண்டுள்ளதாகத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க -

இதுவரை காலமும் தமக்கோ தமது கட்சிக்கோ பொதுக்கட்டமைப்பு யோசனையின் உள்ளடக்கம் குறித்து விளக்கமளிக்கப்படாததல் காரணமாகவே அதுகுறித்து தாம் உறுதியான நிலைப்பாடெதனையும் வெளியிடமுடியாமல் போனதாக தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த பொதுக் கட்டமைப்பு விவகாரத்தினால் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி கவிழ்க்கப்படுவதை ஐ.தே.க கட்சி ஒருபோதும் ஆதரிக்காது

அதுகுறித்த அச்சமின்றி ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை செய்துகொள்ளும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்றும் உறுதி மொழி வழங்கியிருப்பதாகவும் நம்பகமாக தெரியவந்துள்ளது.

இவ்வாறான ஒரு நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கம் தமக்கு கிடையாது என்றும், சமாதான முயற்சிகளை ஆரம்பித்துவைத்த தமது கட்சி அதற்கு வலுச்சேர்க்கும் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளாது என்றும் அவர் இதன் போது ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

விலைவாசி ஏற்றம் போன்ற மக்களுடைய அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்களில் அரசாங்கத்தை தாம் எதிர்த்து வருகின்ற போதிலும் இவ்வாறான ஒரு முக்கிய விடயத்தை அரசியல் நோக்குடன் கையாளும் நோக்கம் தமக்கு கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாவுடனான இந்தச் சந்திப்பையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் கட்சி முக்கியஸ்தர்களுடன் ரணில் விக்கிரமசிங்க முக்கிய கலந்துரையாடலொன்றை ரணில் நடத்தினார்.

இதன்போது ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நிலைப்பாட்டிற்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்திருப்பதாக கட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவரின் இந்த உறுதி மொழியானது ஆட்சியிலிருந்து விலகப்போவதாக ஜே.வி.பி விடுத்துவரும் அச்சுறுத்தலைச் சமாளிப்பதில் ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கிடைத்த ஒரு முக்கிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

## பொதுக் கட்டமைப்புக்கு...

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வடகிழக்குப் பிரதேசத்தில் நிவாரணம் மற்றும் புனர் நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருதானை தொழில்நுட்பக் கல்லூரி சந்திக்கு சமீபமாக இருந்து தேசிய பிக்குகள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தப் பேரணிஆரம்பித்தது.

பேரணியில் பௌத்த பிக்குகள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கறுப்புப் பட்டிகளை அணிந்தும், கொடிகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பிக் கொண்டு கோட்டை ரயில் நிலையம் வரை சென்றடைந்தது.

கோட்டை ரயில் நிலையத்திலிருந்து ஜனாதிபதி மாளிகையை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்பட்ட வேளை, பொலிஸார் தடைகளைப்போட்டு வீதியை மூடினர். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

வீதித் தடைகளை உடைத்துக் கொண்டு அங்கிருந்து ஜனாதிபதி மாளிகையை நோக்கி செல்ல முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், தண்ணீர்ப் பிரயோகத்தையும் மேற்கொண்டு அவர்களைக் கலைத்தனர்.

இதன்போது வீசப்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டு கோட்டை ரயில் நிலையம் முன்பாக அமைக்கப்பட்டிருந்த தேசிய பிக்குகள் முன்னணி உண்ணாவிரத மேடையில் வீழ்ந்து வெடித்தது. சாகும்வரை உண்ணா விரதத்தில் ஈடுபட்டிருந்த பௌத்த பிக்கு தம்பர அமில தேரர் உட்பட அங்கிருந்தவர்கள் சிதறி ஓடினர். இதனால் வீதியில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையால் இரண்டு மணிநேரம் போக்குவரத்து தடைப்பட்டது.

நேற்று ஜனாதிபதி மாவத்தையை அண்மித்த பகுதி வீதிகள் அனைத்தும் மூடப்பட்டதுடன், அங்கு பெருமளவான கலகம் அடக்கும் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் நிலைமை வழமைக்குத் திரும்பியதையடுத்தே வீதிகள் அனைத்தும் திறக்கப்பட்டன.

ஜனாதிபதியிடமிருந்து பொதுக் கட்டமைப்பு குறித்து காத்திரமான பதில் கிடைக்கும் வரை தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறுமென பேரணியை ஏற்பாடு செய்திருந்த அனைத்து பல்கலைக்கழக பொது மாணவர் அமைப்பும், அனைத்து தேசிய பிக்குகள் முன்னணியும் தெரிவித்துள்ளன. (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.